விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 237 வள்ளுவர் ஆண்டு 2055 ஆடி 27 திங்கட்கிழமை (12.08.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சா்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## சமஷ்டி அடிப்படையிலான
# அதிகாரப் பகிர்வு தரும் வேட்பாளருக்கு ஆதரவு

## சிங்கள மக்களுக்கும் அறிவிக்க வேண்டும் தமிழரசுக் கட்சி தெரிவிப்பு

*(வவுனியா)*

சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப் பகிர்வுதர தயாராகவுள்ள ஜனாதிபதி வேட்பாளருக்கு ஆதரவு வழங்கத் தயாராகவுள்ளதாக இலங்கைத் தமிழரசுக் கட்சி தெரிவித்துள்ளது.

இதனைச் சிங்கள மக்களுக்கு அறிவிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. *(15ஆம் பக்கம் பார்க்க)*



## ரணிலுடன் பேச்சில் கலந்து கொள்வோம்
### ஜனநாயகப் போராளிகள் கட்சி

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகளை பேச்சுக்கு அழைத்துள்ள நிலையில் தாம் கலந்துகொண்டு பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடவுள்ளதாக ஜனநாயக போராளிகள் கட்சியின் ஊடகப் பேச்சாளர் துளசி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவரிடம் கேட்டபோது, ஜனாதிபதி 13ஆவது திருத்தச் சட்டத்தை 15

## தேசிய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும்
### எதிர்க்கட்சித் தலைவர்



(மொனராகலை)

நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் தேசிய கொள்கையொன்றைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ள 15

## தமிழ்ப் பொது வேட்பாளர்
# தென்னிலங்கையில் கடும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது
### சிறீதரன் எம்.பி



(கிளிநொச்சி)

தமிழ்ப் பொது வேட்பாளர் விடயம் தென்னிலங்கையில் உள்ள பிரதான ஜனாதிபதி வேட்பாளர்கள் இடையே பெரும் தாக் 02

## ரணிலின் அழைப்பால்
# பொதுக் கட்டமைப்பு கலைபடும் அபாயம்?

(யாழ்ப்பாணம்)

பேச்சுவார்த்தைக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைத்துள்ள நிலையில் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு கலைபடும் அபாய நிலை தோன்றியுள்ளது.

தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பினருடனான கலந்துரையாடலுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்திருந் 02

## பேச்சுவார்த்தைக்கு வாருங்கள்
# தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்புக்கு ஜனாதிபதி ரணில் அழைப்பு
### அழைப்பை நிராகரித்த உறுப்பினர்கள்



(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனான பேச்சுவார்த்தையில் பங்கேற்காதிருக்க தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்புத் தீர்மானித்துள்ளது.

தமிழ்த்தேசியப் பொதுக்கட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சித்தலைவர்களுக்கும் சிவில் சமூக 15

## பூநகரி பரமன்கிராயில் மோ.சைக்கிள் விபத்து
### கொக்குவில் இளைஞன் மரணம்

(கிளிநொச்சி)

பூநகரி பரமன்கிராய்ப் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய இளைஞரே உயிரிழந்தவராவார்.

யாழ்ப்பாணம் நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப் 15

## 24 மணி நேரத்தில் 51 தேர்தல் முறைப்பாடுகள்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான தேர்தல் முறைப்பாடுகள் மேலும் அதிகரித்துள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த 24 மணித்தியாலங்களில் மாத்தி 15

## தேர்தலுக்கு ஒதுக்கப்பட்ட பணத்தை வழங்கத் தயார்
### நிதி இராஜாங்க அமைச்சர்



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பது ஒரு பிரச்சினையல்ல எனவும் அதற்காக நிதி ஒதுக்குவதற்கும் நிதியமைச்சு தயாராக 15

## பெரமுன தீர்மானத்தால்
# ராஜபக்ஷ குடும்பத்துக்குள் கருத்து வேறுபாடுகள்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் பொதுஜன பெரமுன எடுத்துள்ள தீர்மானம் காரணமாக ராஜபக்ஷ குடும்பத்திற்குள் கருத்து வேறுபாடுகள் எழுந்துள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மகிந்த ராஜபக்ஷ குடும்பத்தவர்கள் உட்பட ராஜபக்ஷ குடும்பத்தவர்கள் பலர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவளிக்க வேண்டும் என்ற நிலைப் 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிப்பு

இந்த மாதத்தின் முதல் 4 நாட்களில் மாத்திரம் 26,889 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடத்தின் இது வரையான காலப்பகுதியில் 12 இலட்சத்து 24,948 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர்.

இவர்களில் இந்தியாவிலிருந்தே அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.

அதற்கமைய இந்தியா, ரஷ்யா, பிரித்தானியா, ஜேர்மன், சீனா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளிலிருந்து அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. (ம)

# தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு புதிதாக ஆட்சேர்ப்பு இடம்பெறுவதாக போலிச்செய்தி

(கொழும்பு)

தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குப் புதிதாக ஆட்சேர்ப்பு இடம்பெறுவதாக சமூக வலைத்தளங்கள் மற்றும் வட்ஸ்அப் குழுக்களில் பகிரப்படும் செய்திகள் உண்மைக்குப் புறம்பானது எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இவ்வாறு பகிரப்படும் செய்திகளில் எந்தவித உண்மைத் தன்மையும் இல்லை என்பதுடன், இது குறித்து தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு ஒன்றையும் விடுத்துள்ளது.

அதில், தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குப் புதிதாக ஆட்சேர்ப்பு இடம்பெறுவதாகப் பகிரப்படும் தகவலில் எந்தவித உண்மையும் இல்லை எனவும், சரியான மற்றும் உண்மையான செய்திகளை அறிந்து கொள்ளத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ ஊடகங்களின் ஊடாக இணைந்திருங்கள் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

# பங்களாதேஷுக்கு ஏற்பட்ட கதி இலங்கைக்கு ஏற்படுவதை இடமளிக்கக்கூடாது - சம்பிக்க

(கொழும்பு)

பங்களாதேஷுக்கு ஏற்பட்ட கதி இலங்கைக்கு ஏற்படுவதற்கு இடமளிக்கக் கூடாது என ஐக்கிய குடியரசுக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

பொதுக்கூட்டம் ஒன்றில் தனது கருத்துக்களை வெளியிட்ட அவர், பங்களாதேஷ் அதன் பொருளாதார வேகத்தை, தலைகீழாக மாற்றியமைக்கும் வகையில் ஸ்திரமின்மையை நோக்கி செல்கிறது என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

அரகலய என்ற காலிமுகத்திடல் செயற்பாட்டாளர்கள் பாராளுமன்றத்தை முற்றுகையிட்டு கட்டிடத்தை சூறையாடியிருந்தால் இலங்கை இன்று பங்களாதேஷ் போன்ற நாடாக மாறியிருக்கும் என்று பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். (ம)

# சிலாபத்தில் விபத்து 5 பேர் காயம்

(சிலாபம்)

சிலாபம் மாரவில பிரதேசத்தில் காரும் வானும் மோதி விபத்திற்குள்ளானதில் சிறு குழந்தை உட்பட 5 பேர் காயமடைந்துள்ளனர்.

மாரவில பிரதேசத்தில் நேற்று அதிகாலை 2.45 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

காரின் வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் அதிவேகமாக வந்த வான் மீது மோதியுள்ளதாக கூறப்படுகின்றது.

இந்த விபத்தில் பம்பல, ஹலவத்தை பிரதேசத்தில் வசிக்கும் ஒரே குடும்பத்தை சேர்ந்த உறவினர்கள் மடு தேவாலயத்திற்கு செல்லும் வழியில் விபத்தில் சிக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, விபத்திற்குள்ளான காரின் சாரதி குடி போதையில் இருந்ததாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (ம)

## பொதுக்...

தார். இன்று (12) மாலை 5 மணிக்கு கலந்துரையாடல் நடக்குமென திட்டமிடப்பட்டிருந்தது.

எனினும், இந்த கலந்துரையாடலில் கலந்து கொள்வதில்லையென தமிழ் தேசிய பொதுக்கட்டமைப்பினர் தீர்மானித்திருந்தனர்.

நேற்று (11) இரவு தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைமைக்குழு கூட்டம் இணையவழியில் நடந்தது. இதன்போது இன்றைய சந்திப்பில் கலந்து கொள்வதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இன்றைய சந்திப்பில் புளொட், ஜனநாயக போராளிகள் கட்சிகளும் கலந்து கொள்ளவுள்ளன. சி.வி.விக்னேஸ்வரன் திடீர் சுகவீன முற்று வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பி ஓய்வில் உள்ளதால் அவரால் கூட்டத்தில் கலந்துகொள்ள முடியவில்லையென்றும், அவர் தரப்பில் பிரதிநிதியொருவர் கூட்டத்துக்கு அனுப்பி வைக்கப்படுவார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் பொதுக்கட்டமைப்பினர் எடுத்த தீர்மானத்துக்கு மாறாக கட்சிகள் ஜனாதிபதியை சந்திக்க முடிவெடுத்துள்ளது பற்றி, அந்த குழுவிலுள்ள சிவில் சமூக பிரதிநிதிகளை வினவியபோது,

“இந்த கட்டமைப்பிலுள்ள அரசியல் கட்சிகள் இனிவரும் காலங்களில் தமிழ் மக்களின் அரசியல், இனப்பிரச்சினை தொடர்பான கலந்துரையாடல்களில் கட்சிகள் தனியாக கலந்து கொள்ள முடியாது. பொதுக்கட்டமைப்பிலுள்ள 14 பேரும் ஒன்றாக செல்ல வேண்டும். அதை தவிர்த்து, தனித்தனியாக கட்சிகள் சந்திப்புக்களில் கலந்து கொள்ள முயன்றால், அவர்களை இந்த கட்டமைப்பிலிருந்து கலைத்து விடுவோம்” எனத் தெரிவித்தார். (ம)

# கட்டுநாயக்கவில் மூவர் கைது

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தில் மூன்று பயணிகளை விமான நிலைய குற்றப்புலனாய்வு பிரிவின் அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

36 ஐபோன்கள் மற்றும் 06 மடிக்கணினிகளை சட்ட விரோதமான முறையில் நாட்டுக்குக் கொண்டு வந்து தீர்வை வரி செலுத்தாமல் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வெளியே கொண்டு சென்ற மூவரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் கொழும்பு, தெமட்டகொட பிரதேசத்தில் வசிக்கும் 40-45 வயதுக்கு இடைப்பட்ட வர்த்தகர்கள் மூவர் என தெரியவந்துள்ளது.

விமான நிலையத்தை விட்டு வெளியேறும் போது, அவர்களது பயணப் பைகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் மடிக்கணினிகள் கண்டுபிடிக்கப்பட்டு கைது செய்யப்பட்டனர். (ம)

# மரண அறிவித்தல்

தோற்றம்
02 - 01 - 1956



மறைவு
11 - 08 - 2024

## சிவஸ்ரீ கனகசபாபதி குருக்கள் இராஜேஸ்வரசர்மா

*வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் சுதுமலை சிவன் கோவிலடி, ஆடியபாதம் வீதி, நல்லூர் வடக்கினை வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற கனகசபாபதி குருக்கள் இராசமணி அம்மா அவர்களின் அன்பு மகனாகிய சிவஸ்ரீ கனகசபாபதி குருக்கள் இராஜேஸ்வரசர்மா அவர்கள் நேற்று 2024.08.11 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 2024.08.12 திங்கட்கிழமை பி.ப. 1.00 மணியளவில் ஆடியபாதம் வீதி, நல்லூர் வடக்கில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.*

*இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.*

*தகவல் :* [illegible]

(C-969)

## தென்னில...

கத்தை ஏற்படுத்தியிருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு, இந்த பொது வேட்பாளர் விடயத்தை எதிர்ப்பவர்கள், வாக்களிக்க கூடாது என கூறுபவர்கள் என்ன காரணத்திற்காக எதிர்க்கிறார்கள் அல்லது யாரை ஆதரிக்கின்றார்கள் என்பதையும் தெளிவுபடுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், பிரதான வேட்பாளர்களாக இருக்கின்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ, அநுர குமார திசாநாயக்க மற்றும் நாமல் ராஜபக்ஷ ஆகியோர் சமஷ்டி அடிப்படையிலான ஒரு அரசியல் தீர்வுக்கு தயார் என்றால் அது தொடர்பில் பரிசீலிப்பதற்கு தயார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, வரலாற்றிலேயே ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் காலங்களில் யாருமே இதுவரை யாழ்ப்பாணத்தில் உள்ள அரசியல் கட்சி அலுவலகங்களில் ஆதரவு திரட்டியதாக அறியவில்லை என்றும், ஆனால் இவ்வருடம் தென்னிலங்கையின் பிரதான வேட்பாளர்கள் யாழ்ப்பாணத்திற்கு வந்து ஆதரவு கோரியுள்ளதாக சிறீதரன் எம்.பி தெரிவித்துள்ளார்.

ஆகவே, இந்த பொது வேட்பாளர் என்ற கருப்பொருள் பிரதான வேட்பாளர்களிடத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ம)


**கொழும்பில் பயிற்சியுடன் வேலைவாய்ப்பு**

டிஷ் ஆண்டெனா இணைப்பு மற்றும் கேபிள் டிவி இணைப்பு A/L அல்லது O/L படித்த இளைஞர்கள் மேற்படி பயிற்சியுடன் வேலைவாய்ப்பை பெற்றுக்கொள்ள முடியும். சாரதி அனுமதி சான்றிதழ் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

03 மாத பயிற்சிக் காலத்தில் Rs.40,000/-
(உணவு தங்குமிடம் இலவசம்.) பயிற்சியில் திறமையுடன் செயற்பட்டவர்களுக்கு உணவு தங்குமிடத்துடன் Rs.60,000/= + இதர கொடுப்பனவுகள் வழங்கப்படும். தொடர்பு கொள்ளவும்.

0777 710 785 (KUMAR)
SATS TECH ENGINEERS LANKA (PVT)LTD

(1339)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் முடியும் வரை பாராளுமன்றம் கலைக்கப்படாது

## அரசாங்கம் அறிவிப்பு

**(கொழும்பு)**

**ஜனாதிபதித் தேர்தல் முடியும் வரை பாராளுமன்றம் கலைக்கப்படாது என அரசாங்கம் அறிவித்துள்ளது.**



ஆளும் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் பாராளுமன்ற பெரும்பான்மையை குறித்து எழுந்துள்ள சர்ச்சைகளின் அடிப்படையில் பாராளுமன்றம் விரைவில் கலைக்கப்படலாம் என்று கருத்துக்கள் உலாவுகின்ற நிலையில் அதனை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

ஆளும் கட்சிக்கு 113 என்ற பெரும்பான்மை இல்லை என்ற காரணத்தை அடிப்படையாகக் கொண்டு பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையை முன்வைக்க பிரதான எதிர்க்கட்சி உட்பட எதிர்க் கட்சிகளின் கூட்டணி திட்டமிட்டிருந்தது.

ஆனால் தற்போது ஹரின் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோரின் பாராளுமன்ற உறுப்புரிமை இல்லாமல் போய், ஐக்கிய மக்கள் சக்திக்கு இரு ஆசனங்கள் அதிகரித்துள்ளன.

ஆளும் கூட்டணி கட்சிகளின் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கின்றனர். இவ்வாறானதொரு நிலையில் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை யார் வசம் உள்ளது என்பதில் குழப்பநிலை உருவாகியுள்ளது.


ஜனாதிபதித் தேர்தல் அறிவிக் கப்பட்டுள்ள நிலையில் பாராளுமன்றத்தில் ஏற்பட்டுள்ள பெரும்பான்மை குறித்த குழப்பங்களுக்கு தீர்வுகாணப்பட வேண்டும் என்ற வலியுறுத்தலை எதிர்க்கட்சிகள் முன்வைத்துள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தனவின் தலைமையில் இறுதியாக இடம்பெற்ற ஆளும் கட்சியின் பாராளுமன்ற குழு கூட்டத்தின் பின்னர் பொதுஜன பெரமுனவின் 92 பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதிக்கு ஆதரவளிக்க உள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு உத்தியோகப்பூர்வமாக அறிவித்திருந்தது.

இந்த அறிவிப்பின் பிரகாரம் ஆரம்பத்தில் 134 என்ற பெரும்பான்மையை கொண்டிருந்த ஆளும் கட்சிக்கு தற்போது 113 என்ற பெரும்பான்மை கூட இல்லை என எதிர்க்கட்சிகள் சுட்டிக்காட்டுகின்றன.

எனவே இத்தகைய நெருக்கடியில் பாராளுமன்றம் கலைக்கப்படுமா என்ற கேள்விக்கு அரசாங்கம் அதனை நிராகரித்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்புடன் ஜனாதிபதி ரணில் இன்று சந்திப்பு



(கொழும்பு)

ஏழு அரசியல் கட்சிகளும், சிவில் அமைப்பின் பிரதிநிதிகளும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளரை களமிறக்கி செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ள தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்புடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று திங்கட்கிழமை விசேட சந்திப்பொன்றை நடத்தவுள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ள இந்தச் சந்திப்பில் பங்கேற்குமாறு அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கும் சிவில் பிரதிநிதிகள் எழுவருக்கும் ஜனாதிபதி செயலகத்தில் இருந்து தனித்தனியாக அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில், சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், சிறிகாந்தா ஆகியோர் இந்த சந்திப்பில் பங்கேற்பதென உறுதிப்படுத்தியுள்ளனர்.

அதேவேளை சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் சிவில் தரப்பினர் ஜனாதிபதி பேசுவதற்கு அழைத்த விடயம் சம்பந்தமான தெளிவற்ற நிலைமை காணப்படுவதால் அதுகுறித்து ஆராய்ந்து முடிவெடுப்பதாக அறிவித்துள்ளனர்.

இதேவேளை, சி.வி.விக்னேஸ்வரன் உடல்நலக்குறைவின் காரணமாக இந்தச் சந்திப்பில் கலந்துகொள்ள முடியாது என்று ஜனாதிபதி செயலகத்துக்கு அறிவித்துள்ளதோடு தனது கட்சிப் பிரதிநிதியொருவரை அனுப்புவதற்கு நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். (நி)

# சஜித் பக்கம் சாய்ந்தார் மொட்டு எம்.பி



(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கம்பகா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவிற்கு ஆதரவளிக்க தீர்மானித்துள்ளார்.

சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்திக்கு தனது ஆதரவைத் தெரிவிக்க எதிர்க்கட்சித் தலைவரை பெர்னாண்டோ புள்ளே சந்தித்தார்.

கலாநிதி பெர்னாண்டோ புள்ளே கம்பகா மாவட்டத்தில் இருந்து பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் நெருங்கிய சகாவான மறைந்த அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளேயின் மனைவியாவார்.


அவர் பல மூத்த அரசாங்க பதவிகளை வகித்துள்ளார் மேலும் கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்தின் போது ஆரம்ப சுகாதார பராமரிப்பு, தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய் கட்டுப்பாடு இராஜாங்க அமைச்சராகவும் பதவி வகித்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# தேர்தல் தொடர்பில் இதுவரை 320 முறைப்பாடுகள்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய 51 முறைப்பாடுகள் நேற்று முன்தினம் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. இதன்படி தேர்தல் சட்ட மீறல் தொடர்பில் தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு 25 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு 26 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன. இதேவேளை கடந்த ஜூலை 31 ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் வரை ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய 320 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (நி)

# இந்தியாவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் நட்வர் சிங் காலமானார்



(டில்லி)

இந்திய இலங்கை உடன்படிக்கை உருவாக்கத்தின் போது முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தியுடன் இணைந்து செயற்பட்டவரும் திரைமறைவு நீடவடிக்கைகள் குறித்து நன்கறிந்தவருமான இந்தியாவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் நட்வர் சிங் காலமானார்.


முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சர் நட்வர் சிங் உடல்நலக்குறைவு காரணமாக கடந்த இரண்டு வாரங்களாக டில்லியில் உள்ள மேதாந்தா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை சிகிச்சை பலனின்றி காலமானார். அவருக்கு வயது 95. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## 39 தங்கப் பதக்கங்களுடன் சீனா முதலிடத்தில்



2024 ஒலிம்பிக் போட்டிகள் கடந்த ஜூலை மாதம் 26 ஆம் திகதி தொடங்கி 15 நாட்களுக்கு மேல் நடைபெற்ற நிலையில் நேற்றுடன் நிறைவடைந்தது.

இந்தநிலையில் 32 விளையாட்டுகளுக்கு அமைவாக 329 போட்டிகள் நடைபெற்றதுடன் போட்டிகளில் 10,714 வீரர்கள் பங்கேற்றனர்.

நேற்று ஆண்கள் மற்றும் பெண்களுக்கான 100 மீற்றர் தொடர் ஓட்டப் போட்டிகளின் இறுதிப் போட்டிகள் இடம் பெற்றன. இதில் ஆடவர் பிரிவில் முதலிடத்தை கனேடிய அணியும், பெண்களுக்கான போட்டியில் அமெரிக்காவும் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டன.

தங்கப் பதக்கப் பட்டியலில் சீனா முதலிடம் பிடித்து 39 தங்கப் பதக்கங்களை வென்ற நிலையில் தங்கப் பதக்கப் பட்டியலில் அமெரிக்கா 38 தங்கப் பதக்கங்களுடன் இரண்டாவது இடத்திலும் அவுஸ்திரேலியா 18 தங்கப் பதக்கங்களுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## 5ஆவது தடவையும் தங்கம் வென்று அசத்தல்

கியூபா மல்யுத்த ஜாம்பவான் மிஜான் லோபஸ் ஒலிம்பிக்கில் தொடர்ச்சியாக 5 முறை தங்கம் வென்ற முதல் வீரர் என்ற புதிய சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

41 வயதாகும் இவர் நடைபெற்று வரும் ஒலிம்பிக் தொடரில் கிரேக்க-ரோமன் மல்யுத்தத்தில் பங்கேற்று, தன்னுடைய 5ஆவது தங்கத்தை வென்றுள்ளார்.

இதற்கு முன்பாக தனி நபராக 4 முறை ஒலிம்பிக்கில் தங்கத்தை அமெரிக்காவின் நீச்சல் வீரரான மைக்கேல் ஃபெல்ப்ஸ், நீளம் தாண்டுதல் வீரரான கார்ல் லூயிஸ், வட்டு எறிதல் வீரரான ஆல்ஃபிரட் ஓர்டர் மற்றும் டென்மார்க் நாட்டைச் சேர்ந்த படகோட்ட வீரர் பால் எல்வ்ஸ்ட் ரோம் ஆகியோர் வென்றுள்ளார்கள்.


இறுதிப்போட்டியில் சிலி வீரர் யாஸ்மானி அகோஸ்டாவை 6-0 என தோற்கடித்து தனது 5 ஆவது தங்கத்தை வென்று அசத்தியிருக்கிறார் மிஜான் லோபஸ். (நி)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3193

சனா




மாதவன்




மதுபாலா




நிறோ




கண்ணா




தனுஸ்கா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்காக தராதர பத்திரம் வழங்கும் நிகழ்வு கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் பயின்று வெற்றிகரமாக கற்கை நெறியை பூர்த்தி செய்த 237 ஆசிரியர்களுக்கான பயிற்றப்பட்ட ஆசிரியர் தராதரப் பத்திரம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை இரண்டு அமர்வுகளாக கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்றது.

(படங்கள்: சிவசாந்தன்)

# மதுபானங்களின் விலை குறைக்கப்படமாட்டாது

## மதுவரித் திணைக்களம்

(கொழும்பு)

மதுபானங்களின் விலை குறைக்கப்படமாட்டாது என மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

விசேட மதுபானத்தின் விலையை குறைக்குமாறு அண்மையில் விடுத்த கோரிக்கையை மதுபான உற்பத்தி நிறுவனங்கள் நிராகரித்ததாக மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, மதுபானத்தின் விலையில் எவ்வித மாற்றமும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மதுபானத்தின் விலையை குறைப்பதற்கு அது தொடர்பான மது வரியை குறைப்பதன் மூலமே முடியும் என மதுவரித் திணைக்கள ஆணையாளர் எம்.ஜே.குணசிறி மேலும் தெரிவித்துள்ளார். (நி)

## கிராம அலுவலர்கள் இன்று முதல் பணிப்புறக்கணிப்பு


(கொழும்பு)

இன்று முதல் ஒரு வார போராட்டம் தொடங்கும் என கிராம அலுவலர்கள் தெரிவித்துள்ளனர்.

ஒகஸ்ட் 12 மற்றும் 13 ஆகிய திகதிகளில் பணியை விட்டு வெளியேறுவோம் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கிராம அலுவலர்கள் தொழிற்சங்க கூட்டணியின் இணைத் தலைவர் நந்தன ரணசிங்க ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். (நி)

## சர்வதேச கண்காணிப்பாளர்களுக்கு அனுமதி



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் கண்காணிப்பு பணிகளுக்காக ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பொதுநலவாய நாடுகளின் கண்காணிப்பாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்தினை தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய முறைப்பாடுகளின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்து வருகின்றதாக அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (நி)

## நல்லூரான் திருவடிக்கு... இன்று 4 ஆம் நாள் திருவிழா



## நல்லைக் கந்தவேளே!

வேலனே! யுன்னையே வேண்டிடுமடியாற்கு
வேண்டுவன யாவுமருள்வாய்
காலனே வந்தாலும் கதிகலங் காவண்ணம்
காக்கவே நோக்கியெழுவாய்
பாலனாய்த் தோன்றியே பார்க்கின்ற பொருளெலாம்
பரவியே தெரிய விரிவாய்
சாலவே யுனைப்போற்றிச் சாற்றவே மொழியேது
சதுர்நல்லைக் கந்தவேளே!

கலாபூஷணம், சந்தக்கவிஞர் நவ.பாலகோபால்.

## கந்தனே காத்திடுவாய்

கந்தனே எங்கள் கருணைத் தெய்வமே
எந்தையாய் நின்று என்னைக் காப்பவனே
உந்தன் பாதம் சரணடைய வந்தேன்
எந்தன் நாவினால் உனை தினம் பாடிட
தந்திடுவாயே தமிழை அள்ளி
விந்தைகள் புரிந்து வினைகள் தீர்ப்பவனே
மந்திரம் பலவும் மனதில் நிறைத்து
சிந்தையில் உன்னைச் சிறைப்படுத்திக் கொண்டேன்
வந்திடு என்கண்முன் வரமதைத் தந்திடு
அந்தமும் ஆதியுமாய் அருகிருந்து காத்திடு

தயாளினி சிவநாதன்

# இராசிபலன்

12.08.2024
ஆடி 27, திங்கட்கிழமை
அட்டமி முழுவதும்

சுவாதி காலை 6.36 மணிவரை
சுபநேரம் 12.04-1.34 மணிவரை
இராகுகாலம் 7.34-9.04 மணிவரை

சந்திராஷ்டமம் - உத்திரட்டாதி

வளவன்




விருப்பங்கள் நிறைவேறும் நாள், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




மனதில் நீண்ட நாட்களாக இருந்த பலம் குறையும், வாகன சுகமுண்டு, கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.




குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும், பயணத்தால் பலனுண்டு, பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், கற்பனை மிகுதியான நாள்.




சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காணும் நாள், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம்.




எளிதில் உணர்ச்சி வசப்படுவதை தவிர்ப்பது நல்லது, தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள்.




உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், ஆதாயம் அதிகரிக்கும் நாள், காரிய அனுகூலமுண்டு, சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.




வீட்டுப் பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரலாம், பயணங்களால் பலனுண்டு, வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், சேமிப்பு உயரும் நாள், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.




அரைகுறையாக இருந்த பணிகளை மீண்டும் தொடர்வீர்கள், பற்றாக்குறை தீர்ந்து பணவரவு கூடும் நாள், உறவினர் வழியில் ஏற்பட்ட மனஸ்தாபம் அகலும்.




மனதில் இனம்புரியாத சந்தோசம் கிடைக்கும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.




திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறும் வாய்ப்புண்டு.




பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, தூரதேசத்திலிருந்து அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.




கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், எதையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்துச் செய்வது நல்லது, ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

நன்மையைப் பத்துப்பேர் விரும்பினால் உண்மையை ஒருவனே விரும்புகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களக்கற்கையும் தொண்டைமானாறு வெளிக்கள நிலையமும்

01
ஞானமணி
இரட்ணசிங்கம்
ஆசிரிய கல்வியியலாளர்

மாணவர் கைகளில் அரிய இரு விழியன் வழங்கப்பட்டு அதனைச் செப்பம் செய்து அவதானிக்கும் முறை ஆசிரியரினால் மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றது.

பேருந்திலிருந்து இறங்கிய மாணவர் முதலாம் மாடியிலுள்ள தமது தங்குமிடங்களில் பொதிகளை வைத்து கீழிறங்கி வரும் போதே கற்றற் செயற்பாட்டின் பாடப்பிரவேசம் அல்லது வகுப்பறைக்களத்திற்கு இணைப் பாக்கம் செய்தல் (brain storming) போன்று மாணவர் விரும்பும் செயலினூடாக சூழலுக்கு இசைவாக்கமடையச் செய்யப்படுகின்றனர்.

இரண்டு நாட்கள் கொண்ட முழு நேர வதிவிடப் பயிற்சிக்காக ஆண், பெண் பொறுப்பாசிரியர்கள், பெற்றோர் இருவர் உட்பட ஐம்பத்தியேழு மாணவர்கள் தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்திற்கு வருகை தந்திருந்தனர்.

குளிர்மையான ஆற்றில் விநோதமான பறவைகளை காலையில் வெற்றுக்கண்ணாலும் தொலை நோக்கியூடாகவும் பார்க்கின்ற பாக்கியம் கிடைப்பது அரிது தானே. இதில் பொறுப்பாசிரியர்களுக்கு உதவியாக வந்த பெற்றோர் கூட இயங்கியமை சந்தோசமாக இருந்தது.

தொடர்ந்து,இரண்டாம் மாடியிலிருந்து இறங்கி வந்த பெண் பிள்ளைகளும் சூழலைத் தொலை நோக்கியூடாக அவதானிக்கும் செயலில் மாணவர்களுடன் இணைந்தனர்.

"அரிய இருவிழியன்" (binocular) எனப்படும் கருவியினூடாக தொண்டைமானாற்றின் நன்னீர்க் குளத்திற்கு வருகை தந்த பறவைகளை குறிப்பாக (flamingo) பிளமிங்கோவினையும் கூழைக் கடாவையும் அவதானித்து ஆச்சரியத்தினை வெளிப்படுத்திய பிள்ளைகள் முதலைகளையும் கண்டுவிட்டார்கள். வெளிநாட்டுப் பறவை போன்ற உயிரினங்களின் எண்ணிக்கை இந்த முறை குறைவென்கின்ற நலிவுத்தன்மையை முதலைகள் நிவர்த்தி செய்து விட்டன.

முதலை வாயைப் பிளந்தபடி ஓய்வாக இருக்க பறவைகள் அதன் வாய்க்குள் போய்வந்த காட்சி பிள்ளைகளை வியப்படைய வைத்தமை இயல்பே. "சேர் இந்தப்பறவைகள் முதலையின் வாய்க்குள் நிற்கும் போது முதலை வாயை மூடினால் என்ன கதி. ஏன் இப்படி விளையாடுகின்றன"

"விஞ்ஞானம் என்றாலே கூர்ந்து அவதானித்தல் என்பதில் தான் ஆரம்பிக்கும்.நீங்கள் இன்னும் கூர்ந்து அவதானித்து என்ன நடைபெறுகின்றது என்று கண்டு பிடிங்கள். பறவைகள் முதலையுடன் விளையாடவில்லை."

"சேர். முதலையின் பற்களை சிறிய பறவைகள் துாய்மையாக்குகின்றன."

"ஆம். தம்பி.கிட்டத்தட்ட ஒர் வகை ஒன்றிய வாழ்க்கை போன்றது தான். முதலைக்குப் பல் துாய்மையாக்கல், பறவைக்கும் உணவு. ஆனால் இரண்டும் ஒன்றாக வாழ்வதில்லை. இது ஒன்றிய வாழ்வு என்று கூறமுடியாத வேறுபாடு"

பிள்ளைகள்.அந்த மூலையில் தெரியும் பெயர்ப் பலகையை அரிய இருவிழியனூடாக அவதானித்து அதில் தெரிவதனை வாசியுங்கள். உங்கள் கண் பர்வையின் வலுவை அறியலாம்.அதனைப் பார்த்து புலமைப்பரிசில் பரீட்சையில் ஒரு புள்ளி கூடுதலாகப் பெற்ற மாணவர்களும் உண்டு.

(யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் என்பதுதான் அது)

பதினைந்து நிமிடங்களில் மாணவர்கள் பைனாகுலரை கையாண்டு தொலைநோக்கும் செயற்பாடு முடிவுக்கு வருவதாக அமைந்தது அடுத்த அறிவித்தல்.

ஆம்,"காலையுணவு தயார்" என்ற அறிவிப்புடன் அனைவரும் பாண், பருப்பின் சுவையை உணர அந்த அறைக்கு நகர்ந்தனர்.



அரிய இருவிழியன் (Binocular) கருவியுடன் கடற்கரையில் மாணவர்கள்

"உணவைச்சிந்தாமல், தேவையான அளவினை மட்டும் எடுங்கள், மீண்டும் மீண்டும் எடுக்கலாம் ஆனால் மிச்சம் விடக்கூடாது. மேசையில் கொட்டாமல் உணவு அருந்துகின்ற கலாசாரத்தினைப் பழகிக் கொள்ளுங்கள். ஏற்கெனவே தெரிந்தால் அதனை உங்கள் நண்பர்களுக்கும் பரவச் செய்யுங்கள். இந்த வேளை உணவினைப் பெற முடியாமல் பட்டினியில் இன்றைய பொழுதினைக் கழிக்கின்ற பிள்ளைகள் ஏராளமான அளவில் உள்ளனர். அவர்களை ஒரு முறை நினைத்துப் பார்த்துக் கொண்டு உண்ணுங்கள். "இது விரிவுரையாளரின் அறிவித்தல்.

பெற்றோர், மாணவத்தலைவர்கள் தலைமை தாங்கி உணவு பரிமாறல் முதல் விரிவுரையாளர் குறிப்பிட்ட அறிவுறுத்தல் வரை நடைமுறைக்கு கொண்டு வந்தமை அனைவரையும் கவர்ந்தது. (Situational Leadership) தருணத்திற்கேற்ற முகாமைத்துவம் என்பது இதுதான் போலும்.

அதிபர், ஆசிரியர், மாணவர், பெற்றோர், சமூகம் இணைந்து இவ்வாறு செயற்படுவதனால் தான் சில பாடசாலைகள் மிக வேகமாக முன்னோக்கிச்சென்று மாதிரிப் பாடசாலைகளாக (model school) மிளிர்கின்றன.

அரைமணித்தியாலம் ஒதுக்கப்பட்ட உணவு இடைவேளை மாணவர்களின் சுகாதாரமானதும் துரிதமானதுமான செயற்பாட்டினால் இருபது நிமிடங்களில் நிறைவுக்கு வருகின்றது.


இலத்திரனியல் மற்றும் மின் உபகரணங்களுடன் மாணவர்கள்

செயற்பாட்டு அறையினுள் ஆறு பேர் கொண்ட எட்டுக் குழுக்களாக மாணவர்கள் அமர்ந்திருக்கின்றனர். அவர்கள் ஒவ்வாருவர் கைகளிலும் 16 பக்கம் கொண்ட கையேடு. கையேடு பெருமளவு இடைவெளிகளைக் கொண்டு அமைந்திருந்தது. இடைவெளிகள் மாணவர்களால் செயன்முறை வேலையின் போது நிரப்பப்பட வேண்டியன. மேசையின் இலக்கத்தினைக் கொண்ட பெட்டிகளுள் அவர்களுக்கான இலத்திரனியல் மற்றும் மின் உபகரணங்கள் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு மேசைக்கும் பொறுப்பாக ஒவ் வொரு உதவி ஆசிரியர்கள், பாடசாலை விஞ்ஞான ஆசிரியர்களும் சில மேசைகளின் செயற்பாடுகளுக்கு உதவியாளர்களாக காணப்பட்டனர்.

ஒரு சாதாரண மின்குமிழ் இரண்டு திசைகளிலும் மின் கடத்தும் என்கின்ற அடிப்படையிலிருந்து ஆரம்பித்து மின்கடத்தி காவலி. குறைகடத்தி என்று இனங்காணலிலிருந்து அவற்றின் பிரயோகங்கள் வரை டயோட்டு, அரை அலைச்சீராக்கல், முழு அலைச்சீராக்கல், ஒப்பமாக்கல், திரான்ஸிஸ்டர், அதன் பிரயோகங்கள் மற்றும் புத்தாக்கிகள், விரியலாக்கல், ஆளிப்பிரயோகம், கோடல்கள், ஒன்றிணைந்த சுற்றுக்களின் பிரயோகம், தடைகள் எனப் பலவாறான செயன் முறைகள். இவை அனைத்தையும் மூன்று மணித்துளிகளுள் கையாள்வது என்பது என்னவோ மிகக் கவனமாகத் திட்டமிடலூடாகவும் கவனமாகச் செயற்படுத்துவதுாடகவுமே நடைமுறைச் சாத்தியமாகின்றது. இவற்றை நடைமுறைப்படுத்த நுண் முறைக் கற்பித்தல் (micro teaching) அவர்களுக்கு துணைபுரிகின்றது.

இடையில் வழங்கப்பட்ட தேநீர் மற்றும் பணிஸ் என்பன கற்றற் களைப்பைப் போக்கும் சஞ்சீவி (Refreshment) ஆகின்றன.

ஆய்வு கூட வேலைகளில் முதல் முறையாக ஈடுபடுகின்ற மாணவர் கண்களில் ஆச்சரியம் கலந்த ஆரவாரிப்பு.

சிலவேளைகளில் செயன் முறைக் கருவி செயற்படாத போது ஏற்படும் பிழைகளுக்கான அவர்களின் சிரிப்பு அவர்களின் ஆய்வுகூட பயன்பாட்டில் இதுவே முதற்தரம் எனக் காட்டிக்கொடுத்து விடும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு துறைமுகத்தில் பற்றி எரிந்த சரக்கு கப்பல்

(கொழும்பு)

கொழும்புத் துறைமுகத்தில் நங்கூரமிட்டிருந்த சரக்குக் கப்பல் ஒன்றில் தீ விபத்தும் வெடிப்பும் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த தீ விபத்தானது, நேற்று அதிகாலை இடம்பெற்றதாக இலங்கை துறைமுக அதிகார சபை யின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அதன் போது துறைமுக தீயணைப்புப் பிரிவு உட்பட துறைமுக ஊழியர்கள் தீயைக் கட்டுப்படுத்தி அணைத்ததாகவும், தீயை அணைக்க முடியாமல் போயிருந்தால் பெரும் அழிவு ஏற்பட்டிருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தீயினால் கப்பலுக்கு ஏற்பட்ட சேதம் இதுவரை மதிப்பிடப்படவில்லை என்றும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் இந்த தீ விபத்தினால் சரக்குக் கப்பலுக்கு அதிக சேதம் ஏற்பட்டுள்ளதாகவே கூறப்படுகிறது. (நி)

# அனுபவம் இல்லாதவர் நாமல்

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க



(கொழும்பு)

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக நாமல் ராஜபக்ஷ முன்மொழியப்பட்டுள்ளார், ஆனால் அவருக்கு இன்னும் அனுபவம் தேவை என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

பொலநறுவையில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு கருத்து வெளியிட்ட அமைச்சர் பிரசன்ன ரணதுங்க,நாங்கள் மகிந்த ராஜபக்ஷவை மிகவும் நேசிக்கின்றோம். நாட்டைப் பற்றிய முடிவுகளை எடுக்க வேண்டியிருக்கும் போது, தனியுரிமையைப் பார்க்க மாட்டோம்.நாமல் ராஜபக்ஷவுக்கு இன்னும் காலம் இருக்கிறது. அவர் இன்னும் அனுபவம் பெற வேண்டும். மக்களின் கருத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும் என குறிப்பிட்டுள்ளார். (நி)


## மக்கள் வங்கி
## பிராந்திய தலைமைக் காரியாலயம்-யாழ்ப்பாணம்

மக்கள் வங்கி யாழ்ப்பாணம் பிராந்திய தலைமைக் காரியாலயத்துக்கு உட்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள்/சேவை மையங்களில் 31.05.2023 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட) 27.08.2024 ஆம் திகதி வரை மீட்டெடுக்கப்படாத/புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ்க்காட்டப்பட்டுள்ள திகதிகள் மற்றும் இடத்தில் காலை 8.30 மணிக்கு தொடங்கி ஏலத்தில் விற்கப்படும்.

**ஏல விற்பனை நிகழும் தினங்கள் - 28.08.2024 மற்றும் 29.08.2024**

| ஏல விற்பனை நிகழும் இடம் | யாழ் ஸ்ரான்லி வீதிக்கிளை |
|---|---|
| கிளைகள் | யாழ்/ஸ்ரான்லி வீதி, தெல்லிப்பளை, யாழ்/பிரதான வீதி, ஊர்காவற்றுறை, நெல்லியடி, அச்சுவேலி, சங்கானை, சுன்னாகம், சாவகச்சேரி, வல்வெட்டித்துறை, யாழ்/பல்கலைக்கழகம், யாழ்/கன்னாதிட்டி, பருத்தித்துறை, கொடிகாமம். |
| சேவை நிலையங்கள் | மானிப்பாய், கொக்குவில்(நாவலர் வீதி), மல்லாகம், காங்கேசன்துறை, உரும்பிராய், புத்தூர், பண்டத்தரிப்பு, கோப்பாய், அளவெட்டி, கைதடி, உடுப்பிட்டி, திருநெல்வேலி, கல்வியங்காடு, இணுவில், புலோலி |

இந்த ஏலங்களை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்யவும், ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்றவும், ஒன்றிணைத்துச் செயற்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்தி வைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

பிராந்திய முகாமையாளர், பிராந்திய தலைமைக் காரியாலயம், கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே.இல:- 021 222 2601, 021 222 2602

(சி-965)

PEOPLES BANK
Pride of the Nation


# நல்லூர் உற்சவகால தெய்வீக இசை அரங்கு


(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு இளஞ்கலைஞர் மன்றம் மற்றும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் இணை அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கு இன்று திங்கடகிழமை இடம் பெறும்.

பிற்பகல் 6.45 மணி தொடக்கம் 7.10 மணிவரை வயலின் இசை இடம்பெறும். இதில் வயலின்-குமரேசன் சயந்தன், கணேசாயினி ஸ்ரீனிவாசன், யானுஷா இராஜகோபால், புல்லாங்குழல்-சி.அனோஸ்ரிபன், மிருதங்கம் ம.லோகேந்திரன், கஞ்சிரா-பு.வேணுகாந்தன், கடம்-க.தசாணன் ஆகியோர் கலந்து கொள்ளறவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து பிற்பகல் 7.16 தொடக்கம் 8.05 வரை இசையரங்கு இடம்பெறும். இதில் பாட்டு-ராதிகா நாவேந்தக்குருக்கள், வயலின் இ.நிரோஜன், மிருதங்கம்-மு.சுலக்சன், முகர்சிங்-என்மோகனதர்சன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (நி)

# மகிந்தவை சந்தித்த இந்திய தூதுவர் சந்தோஸ்



(கொழும்பு)

பொதுஜன பெரமுனவின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ஷவை இந்திய தூதுவர் சந்தோஸ் ஜா சந்தித்து கலந்துரையாடி உள்ளார்.

கொழும்பிலுள்ள மகிந்த ராஜபக்ஷவின் இல்லத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இந்த சந்திப்பு நடைபெற்றது.

இந்த சந்திப்பு நடைபெற்றதனை இந்திய தூதுவர் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் இந்திய தூதுவர், மகிந்த ராஜபக்ஷவை சந்தித்தமை முக்கியத்துவம் வாய்ந்ததாக தெரிவிக்கப்படுகிறது. (நி)


**லங்கா மஹால் (PVT) LTD**

DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
00919566156719

WESTERN UNION WU, MoneyGram, Ria MONEY TRANSFER ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974

(227)



## மணிவிழா வாழ்த்து



திருமதி. ச.தயாபரன்

(SLTS-I, BEd, பயிற்றப்பட்ட ஆசிரியர்–விசேட சங்கீதம்)

சேவை விபரம்

- வ/கனகராயன்குளம் ம.வி (29.11.2000-30.06.2003)
- வ/நெடுங்கேணி ம.வி (01.07.2003-18.01.2010)
- வ/கனகராயன்குளம் ம.வி (19.01.2010-13.05.2012)
- யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரி (14.05.2012-07.08.2024)

Congratulations

எமது பாடசாலையில் சங்கீத ஆசிரியராக கடமையாற்றி 07.08.2024 முதல் ஓய்வு பெற்றுச் செல்லும் எமது பாடசாலை ஆசிரியரை மனமார வாழ்த்துகின்றோம்.

நலன்புரிக்கழகம்
யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரி, அச்சுவேலி.

(சி-966)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## நீதிமன்றத்தை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம்! பதவி விலகினார் பங்களாதேஷ் பிரதம நீதியரசர்



(டாக்கா)
ஆர்ப்பாட்டக்காரர்களின் எதிர்ப்பைத் தொடர்ந்து பங்களாதேசின் பிரதம நீதியரசர் ஒபதுல் ஹசன் பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் உயர்நீதிமன்றத்தை சூழ்ந்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டதுடன் பிரதம நீதியரசர் பதவி விலகுவதற்கு ஒரு மணிநேர அவகாசத்தை வழங்கிய நிலையிலேயே அவர் பதவி விலகியுள்ளார்.

ஜனாதிபதியுடன் கலந்தாலோசித்த பின்னர் 65 வயது பிரதமநீதியரசர் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

நாட்டின் அனைத்து நீதிபதிகளுடனும் நீதிபதி சந்திப்பொன்றிற்கு அழைப்பு விடுத்த பின்னரே இந்த ஆர்ப்பாட்டங்கள் ஆரம்பமாகின.



இந்த நடவடிக்கையை நீதித்துறையின் சதிப்புரட்சி முயற்சி என ஆர்ப்பாட்டக்காரர்கள் வர்ணித்தனர்.

கடந்த வருடம் நியமிக்கப்பட்ட ஹசன் பதவி விலகி பிரதமர் ஷேக் ஹசீனாவின் விசுவாசி என கருதப்படுகின்றார். (நி)

## தரையில் பறக்கும் ரயில் பரிசோதித்தது சீனா



(பீஜிங்)
மணிக்கு ஆயிரம் கி.மீ. வேகத்தில் செல்லும் பறக்கும் ரயிலை, சீனா சோதனை செய்து பார்த்துள்ளது. இந்த அதிவேக ரயில் பயன்பாட்டுக்கு வந்தால், தலைநகர் பீஜிங் மற்றும் ஷாங்காய் இடையே உள்ள 1,200 கி.மீ., தூரத்தை 90 நிமிடங்களில் கடக்க முடியும்.

தற்போது பயன்பாட்டில் இருக்கும் புல்லட் ரயில் மூலம் பீஜிங்கிலிருந்து-ஷாங்காய்க்கு 4 மணிநேரம் 18 நிமிடத்தில் செல்ல முடியும். புல்லட் ரயில் மணிக்கு 350 கி.மீ., வேகத்தில் செல்கிறது. தற்போது, அதிவேக பயணத்தில் புரட்சியை ஏற்படுத்தும் வகையில் சீனா மணிக்கு ஆயிரம் கி.மீ., வேகத்தில் பயணிக்கும் ரயிலை அறிமுகம் செய்ய களத்தில் இறங்கி உள்ளது.

தற்போது 2 கி.மீ தூரம் வரை நடத்தப்பட்ட சோதனையில் ரயில் எதிர்பார்த்த வேகத்தை அடைந்தது என அதிகாரிகள் தெரிவித்தனர். ஹைப்பர் லூப் திட்டம் என்று அழைக்கப்படும் அதிகவேக பறக்கும் ரயிலை ஷாங்க்சி மாகாண அரசு மற்றும் சீனா எரோஸ்பேஸ் சயின்ஸ் அண்ட் இண்டஸ்ட்ரி கார்ப்பரேஷன் இணைந்து உருவாக்கி உள்ளது. வானத்தில் பறக்கும் விமானங்களுக்கு பதிலாக, ரயில் தரையில் பறக்க வேண்டும் என்ற நோக்கத்தில் உருவாக்கி உள்ளோம் என பொறியாளர்கள் தெரிவித்தனர். (நி)

## ட்ரோன் தாக்குதலில் சிக்கி 200 ரோகிங்கியா அகதிகள் பலி

(மியான்மார்)
இராணுவ ஆட்சி நடைபெறும் மியான்மாரில் இருந்து சிறுபான்மை மக்களான ரோகிங்கியாமுஸ்லிம்கள் அகதிகளாக பல்வேறு நாடுகளுக்குப் புலம் பெயர்ந்து வருகின்றனர்.

மத ரீதியாகவும் புவியியல் ரீதியாகவும் அதிகமானோர் வங்காளதேசத்தில் குடியேறி வருகின்றனர்.

2017 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை 7.3 லட்சத்திற்கும் மேற்பட்டோர் அகதிகளாகத் தப்பி சென்றுள்ளனர். மியான்மாரில் கிளர்ச்சியாளர்களுக்கும், இராணுவத்திற்கும் இடையே நடந்து வரும் மோதலில் அகதிகள் கொல்லப்பட்டு உள்ளனர் எனக் கூறப்படுகிறது.

இந்தத் தாக்குதல் பற்றிய வீடியோக்கள் சமூக ஊடகங்களில் பரவி வருகின்றன.

தாங்கள் எடுத்துச்சென்ற சொற்ப உடைமைகள் சிதறிக்கிடக்க அதன் அருகே அவர்களின் உடல்கள் குவியலாகக் கிடக்கின்றன. (நி)

## நடுவான

## 62 பேர்



திடீரென நடுவானில் நிலை தடுமாறிய விமானம், பிரேசில் - வின்ஹெடோ நகரிலுள்ள வீடுகளின் மீது தலைகீழாக கவிழ்ந்து விழுந்துள்ளது.

விழுந்த சில நொடிகளிலேயே விமானத்தின் பெரும் பகுதியொன்று தீப்பிடித்து எரிய ஆரம்பித்துள்ளது. பின்னர் அதிலிருந்து கரும்புகை வெளியேறியுள்ளது.

சர்வதேச ஊடகங்கள் வெளி

## பள்ளிவாசல் முகாம் இஸ்ரேல் கோரத்தாக்

### நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் உ

(ஜெருசலேம்)
கிழக்கு காசாவில் மக்கள் தஞ்சமடைந்திருந்த பள்ளிவாசல் மீது இஸ்ரேல் நடத்திய வான் வழித்தாக்குதலில் 100 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பஜர் எனப்படும் பகல் நேர தொழுகையில் மக்கள் ஈடுபட்டிருந்தபோது நேற்று முன்தினம் இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

கடந்த ஒரே வாரத்தில் 4 பள்ளிவாசல் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியுள்ளது. ஒகஸ்ட் 4 ஆம் திகதி 2 பள்ளிவாசல்கள் மீது நடந்த தாக்குதலில் 30 பேர் உயிரிழந்தனர்.

அதற்கு முந்தைய நாள் நடத்தப்பட்ட தாக்குதலில் 17 பேர் உயிரிழந்துள்ளனர்.


குறித்த தாக்குதல்கள் இந்தப் பள்ளிவாசல்களில் ஹமாஸ் கிளர்ச்சியாளர்கள் ஒளிந்திருப்பதானால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# னில் வெடித்து சிதறிய விமானம்

# பர் ஸ்தலத்தில் உயிரிழப்பு !



(பிரேசிலியா)

**பிரேசில் சாவ்பாலோ மாநிலத்தில் சென்றுகொண்டிருந்த விமானமான 2283 என்ற விமானம் நிலை தடுமாறிக் கீழே விழுந்து வெடித்ததில் 62 பயணிகள் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளனர்.**

ல
-
வீடு
ந்து

யே
ந்தி
ரம்
லி
பறி

ளி

யிட்டுள்ள செய்தியின் படி, 62 பேர் பயணித்த அந்த விமானம் செங்குத்தாக கீழே விழுந்து வெடித்துச் சிதறியமையால் அனைவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

58 பயணிகள், 4 பணியாளர்களுடன் இந்த விமானம் சாவ்பாலோவின் சர்வதேச விமான நிலையமான குருல்ஹாஸை நோக்கி சென்றுகொண்டிருந்த வேளையிலேயே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

ஆனால், விபத்துக்கான காரணம் என்னவென்று இதுவரையில் எந்தத் தகவலும் வெளிவரவில்லை. விபத்து குறித்து மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (ஙி)



# ாம் மீது
# ாக்குதல்
## ர் உயிரிழப்பு

மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் என இஸ்ரேல் நியாயப்படுத்தியுள்ளது.

இதற்கிடையில் வரும் ஒகஸ்ட் 15 ஆம் திகதி இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் அமைதிப் பேச்சுவார்த்தையில் ஈடுபட உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஙி)



# மீண்டும் அதிகரிக்கும் கொவிட் தொற்று உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை

(ஜெனீவா)

சமீபத்திய வாரங்களில் 84 நாடுகளில் கொவிட் 19 குறித்த நேர்மறை சோதனைகளின் சதவீதம் அதிகரித்து வருவதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸின் கடுமையான மாறுபாடுகள் விரைவில் வரக்கூடும் என்றும் ஐநா சுகாதார நிறுவனம் எச்சரிக்கிறது.

"கொவிட்-19 இன்னும் உள்ளது. மற்றும் அனைத்து நாடுகளிலும் பரவி வருகிறது" என்று உலக சுகாதார ஸ்தாபன வைத்தியர் மரியா வான் கெர்கோவ் ஜெனீவாவில் தெரிவித்தார்.

"84 நாடுகளில் உள்ள எங்கள் செண்டினல் அடிப்படையிலான கண்காணிப்பு அமைப்பின் தரவு, SARS-CoV-2 நேர்மறையான சோதனைகளின் சதவீதம் பல வாரங்களாக அதிகரித்து வருவதாக அவர் குறிப்பிட்டார்.

கோடையில் வைரஸ் வெகுதூரம் பரவியுள்ளது. ஜனாதிபதி ஜோ பைடன் ஜுலை மாதம் நேர்மறை சோதனை செய்தார்,


மேலும் உலக சுகாதார அமைப்பின் படி, பாரிஸ் ஒலிம்பிக்கில் சுமார் 40 விளையாட்டு வீரர்கள் கொவிட், பிறசுவாச நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

உலக சுகாதார ஸ்தாபன வெளியீட்டின்படி, அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் மேற்கு பசுபிக் நாடுகளில் நோய்த்தொற்றின் புதிய அலைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

SARS-CoV-2 இன் புழக்கம் தற்போது அறிவிக்கப்பட்டுள்ளதை விட இரண்டு முதல் 20 மடங்கு அதிகமாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஙி)

# கோதுமை விளைச்சல் வீழ்ச்சி கோதுமை மாவுக்கு தட்டுப்பாடு

## 40 ஆண்டுகளின் பின் பிரான்ஸில் ஏற்பட்டுள்ள அபாயம்



(பாரிஸ்)

பிரான்ஸில் முக்கிய உணவுப் பொருளான கோதுமை மாவிற்கு தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

1983 ஆம் ஆண்டின் பின்னர் பிரான்ஸ் இதுபோன்ற ஒரு நிலமைக்கு முகம் கொடுத்துள்ளதாக பொருளாதார வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

அந்நாட்டில் தொடர்ச்சியாக பதிவாகி வரும் மோசமான கால நிலை காரணமாக கோதுமை விளைச்சல் வீழ்ச்சியடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

25.17 மில்லியன் டொன்களால் இந்த உற்பத்தி நடப்பு ஆண்டில் வீழ்ச்சியடைந்துள்ளது.

இந்த நிலையானது கடந்த ஐந்து வருடங்களுடன் ஒப்பிடுகையில் 18.7% சதவீத வீழ்ச்சியாகும்.

கடந்த இலையுதிர் காலத்தில் மிக அதிகளவு மழை பதிவாகியிருந்தது. இந்த மழை விவசாயத்தை பெருமளவில் பாதித்திருந்தது.

அதில் அதிகளவு பாதிக்கப்பட்டிருந்தது கோதுமை உற்பத்தி என பொருளாதார வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர். (ஙி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்கொம்பன் கிராமத்திற்கு பேருந்து சேவை வழங்குக

## இ.போ.ச முகாமையாளரிடம் கடிதம் கையளிப்பு

(அக்கராயன்)

கிளிநொச்சி முக்கொம்பன் மகா வித்தியாலயத்திற்கு மாணவர்கள் வந்து செல்லக் கூடிய வகையில் பேருந்து சேவை நடைபெற வேண்டும் எனக் கோரி இலங்கை போக்குவரத்து சபையின் கிளிநொச்சி கிளை முகாமையாளரிடம் முக்கொம்பன் பகுதி மக்களினால் நேற்று முன்தினம் கடிதம் கையளிக்கப்பட்டது.

கிளிநொச்சியில் இருந்து காலையில் புறப்படும் இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து பூநகரி, பள்ளிக்குடா, அரசபுரம், நேரடம்பன், வழியாக முக்கொம்பன் மகா வித்தியாலயம் வரை பணியில் ஈடுபட்டது.

கடந்த ஓர் ஆண்டாக இச் சேவை இடம் பெறாததன் காரணமாக அரசபுரம், நேரடம்பன் பகுதி மாணவர்கள் பாடசாலைக்கு வந்து செல்வதில் நெருக்கடியினை எதிர்கொண்டுள்ள நிலையில் மாணவர்களின் நலன் கருதி அரசபுரம் நேரடம்பன் வழியாக பேருந்து சேவையினை தொடர்ந்து நடத்துமாறு கையளிக்கப்பட்டுள்ள கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

முக்கொம்பன் கிராமத்தில் 700 வரையான குடும்பங்கள் உள்ளன. பேருந்துகள் ஒழுங்காக சேவையில் ஈடுபடாவிட்டால் மாணவர்கள் பூநகரிக்கோ அக்கராயனுக்கோ செல்ல முடியாத நிலைமை உள்ளது.

இதேவேளை அக்கராயன், பூநகரி வைத்தியசாலைகளுக்கும் மக்கள் செல்வதில் நெருக்கடி நிலைமை காணப்படுவதன் காரணமாக முக்கொம்பன் கிராமத்திற்கான பேருந்து சேவைகளை தொடர்ச்சியாக நடத்துவதற்கு கிளிநொச்சி மாவட்ட செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதும் முக்கொம்பன் பொது அமைப்புகளின் கோரிக்கையாக உள்ளது. (நி-350)

## பெற்றோர்களுக்கான விழிப்புணர்வு

(சாவகச்சேரி)

கொடிகாமம் போக்கட்டி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை மாணவர்களுடைய பெற்றோருக்கு அண்மையில் சிறுவர் துஷ்பிரயோகம், வீட்டு வன்முறை மற்றும் வீதி ஒழுங்கு தொடர்பில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

பாடசாலை அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி விழிப்புணர்வு நிகழ்வில் கொடிகாமம் பொலிஸ் நிலைய உப பொறுப்பதிகாரி பிரபாகரன் மற்றும் கொடிகாமம் பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பதிகாரி தர்மரட்ணம் ஆகியோர் கலந்து கொண்டு பெற் றோருக்கான விழிப்புணர்வை ஏற்படுத்தியிருந்தனர். (நி-30)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 160 | 300 | 150-200 | 200 |
| உருளைக்கிழங்கு | 220 | 220 | 200 | 190 | 200 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 450 | 200 | 350 |
| தக்காளி | 250 | 300 | 280 | 250 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 180 | 180 | 120-140 | 200 |
| கோவா | 400 | 300 | 400 | 300 | 400 |
| கரட் | 400 | 350 | 280 | 300 | 350 |
| பூசணி | 180 | 140 | 160 | 150 | 160 |
| புடோல் | 100 | 150 | 150 | 140 | 200 |
| வாழைக்காய் | 200 | 280 | 280 | 200 | 300 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 400 | 250-400 | 350 |
| பெரிய வெங்காயம் | 250 | 250 | 250 | 220 | 240 |
| பாகற்காய் | 300 | 300 | 450 | 400 | 450 |
| வெண்டக்காய் | 180 | 120 | 160 | 160-200 | 400 |
| கருணைக் கிழங்கு | 160 | 180 | 200 | 150 | 240 |
| பயற்றங்காய் | 200 | 300 | 200 | 200-250 | 250 |
| லீக்ஸ் | 350 | 400 | 280 | 350 | 400 |
| பீற்றூட் | 400 | 300 | 300 | 300 | 200 |
| கறிமிளகாய் | 800 | 800 | 700 | 400 | 1000 |
| முருங்கைக்காய் | 150 | 130 | 150 | 40-60 | 160 |
| போஞ்சி | 650 | 650 | 600 | 350 | 700 |
| கத்தரி தம்புள்ள | 150 | 120 | 250 | - | 150 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 40 | 50 | 100 |
| தேசிக்காய் | 600 | 600 | 600 | 400-500 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 130 | 70 | 60-100 | 80-130 |
| இராசவள்ளி | - | 900 | 650 | 250 | 700 |
| வெங்காயப்பூ | 180 | 150 | 300 | - | 350 |
| முள்ளங்கி | 100 | 120 | 120 | 100 | 120 |
| பொன்னாங்காணி | 100 | 90 | 80 | 80 | 60 |
| வல்லாரை | 60 | 50 | 70 | 80 | 100 |
| ஈரப்பலா | 100 | 60 | 50 | 80 | 80 |

# இன்று ஒரு தகவல் 208



தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## பாவ மன்னிப்பு

வழியிலே ஒருவன் அடிபட்டுக் கிடந்தான்.அவன் பாட்டுக்கு கிடக்கட்டும்! நமக்கு என்னத்திற்கு வம்பு என்று நினைத்துக் கொண்டு திரும்பி பார்க்காமல் போறவர்கள் இந்த உலகத்திலே அதிகம். மனிதனுக்கு மனிதன் உதவ வேண்டும்! இறைவன் விரும்புவது இதைத்தான் என்று யேசுநாதரே சொல்லுகிறார்.

மனமுவந்து நாம் இறைவனை நேசிக்க வேண்டும். அயலவரை நம்மைப் போல் நினைத்து நேசிக்க வேண்டும். சரி! என்னுடைய அயலான் யார்? இதை விளக்குவதற்கு யேசுநாதர் ஒரு கதையை சொன்னார். ஒருவன் ஜெருசலத்திலேயிருந்து எரிகோவுக்கு சென்றுகொண்டிருந்தான். வழியிலே திருடர்கள் பார்த்தார்கள். அவனை அடித்துப் போட்டுவிட்டு இருப்பவை எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு போய் விட்டார்கள். அடி என்றால் பலமான அடி.

கீழே விழுந்து கிடக்கின்றான். யாரவது உதவி செய்யவில்லை என்றால் அவன் உயிர் தப்புவது கஷ்டம். அந்த சமயத்திலே ஒரு யூதகுரு அந்த வழியால் வந்தார். வழியில் அவன் கிடப்பதைப்பார்த்தான். ஒன்றும் செய்யவில்லை அவர் பாட்டிற்கு சென்று விட்டார். அடுத்து லேவியன் ஒருவர் அந்த வழியாக வந்தார்....அவரும் ஒன்றும் செய்யவில்லை.

அவன் பாட்டிற்கு சென்றுவிட்டார். இவர்கள் இரண்டு பேரும் ஜெருசலேத்திலிருந்து அங்கே கோவிலில் செய்ய வேண்டிய பணிகளை முடித்துக்கொண்டு எரிகோவுக்குப் போய்க்கொண்டிருக்கின்றார்கள். மூன்றாவதாக சமாரித்தன் ஒருவன் அந்த வழியாக வந்தான். அடிபட்டுக்கிடக்குறவனைப் பார்த்தான். உடனே அருகில் ஓடிச்சென்று காயங்களைத்துடைத்து மருந்து கட்டி விட்டான்.

தன்னுடைய கோவேறு கழுதை மேலே அவனை தூக்கி வைத்து ஒரு சத்திரத்துக்கு அழைத்துக்கொண்டு போனான். அங்கே இருந்தவர்களிடம் இவரை கவனித்துக் கொள்ளச் சொல்லி பணம் எல்லாம் கொடுத்தான். இன்னும் செலவானாலும் திரும்பி வரும் போது செலவான பணத்தை கொடுக்கின்றேன் என்று சொல்லி விட்டு வியாபார அலுவலைக் கவனிக்கப்போய் விட்டான். காயம் பட்டவனுக்கு இந்த மூன்று பேரில் யார் அயலான்? யார் பரிவு பார்த்து உதவி செய்தானோ அவன் தான் ! இப்படிப்பட்ட அயலான்களை நம்மைப் போலவே நேசிக்க வேண்டும். மனிதன் நல்லவனா இருக்குறதும் கெட்டவனா இருக்குறதும் அவன் மனதைப் பொறுத்துத் தான்! என்று தெரிந்து கொள்ள வேண்டும் நாங்கள். ஒரு காலத்திலே நல்லவனாக இருக்குறவன் இன்னும் ஒரு காலத்தில் மாறிப் போய்விடுகின்றானே. இப்ப லியனார்னா டோ டாவின்சி பற்றி உங்களுக்குத் தெரியும். மோனாலிசா அவருடைய படைப்பு. தி லாஸ்ட் சப்பர் அவருடைய படைப்பு.

அருமையான ஓவியம். மிலானிலே இதை தீட்டியிருக்கின்றார். அதை வரையும் போது டாவின்சி என்ன செய்தார் என்றால் முதலில் யேசுவின் சீடர்கள் 11 பேரையும் வரைந்து முடித்தார். இரண்டே இரண்டு பேரைத்தான் இன்னும் வரையவில்லை யார் என்றால் ஒருவர் இயேசு கிறிஸ்து! இன்னொருத்தர் அவரைக் காட்டிக் கொடுத்த யூதாஸ்காரியத்.

இந்த இரண்டு பேர் உருவத்தையும் வரைவதற்குரிய இடத்தை அப்படியே விட்டுவிட்டார். பின்பு பார்க்கலாம் என்று. ஏன் இப்படி செய்தார் தெரியுமா? லியனார்னா டோ டாவின்சி, எல்லாம் துல்லியமாக அமைய வேண்டும் என்று எதிர்பார்க்கின்றவர். பொருத்தமான மாடல்கள் அவருக்கு தேவைப்பட்டது. அது கிடைக்குற வரைக்கும் வரைவதில்லை என்று வைத்து விட்டார். முதலில் கிறிஸ்துவை வரைய வேண்டும். அதற்கு பொருத்தமாக ஒரு மாடல் தேவை. மிலான் நகரத் தெருக்கள் எல்லாம் தேடி அலைந்தார். ஒரு அழகான இளைஞனைப் பார்த்தார். தெய்வீக அம்சம் அப்படியே இருந்தது. இயேசு கிறிஸ்துவுக்கு இந்த இளைஞன் தான் பொருத்தமான மாடல் என்று முடிவு செய்தார். உடனே இடது பக்கம் விட்டு வைத்திருந்த இடத்திலே யேசுவை வரைந்து முடித்துவிட்டார். அந்த வேலை முடிந்தது. அடுத்தது யூதாஸ்...இதுக்கு ஒரு மாடல் தேவை. மறுபடியும் தேடித் தேடி அலைந்தார்.பொருத்தமான ஒருத்தரும் கிடைக்கவில்லை.

அப்படியே பல வருடம் ஆகி விட்டது....அதிக காலத்திற்கு பின்பு ஒருத்தர் கிடைத்தார். அவர் ஒரு குடிகாரன். மிகவும் பொருத்தமா தெரிந்தது அந்த மாடலுக்கு அழைத்துக்கொண்டு போய் மாடலை அமர வைத்தார். வரைய ஆரம்பித்தார். அந்த மனிதன் படத்தைப் பார்த்தும் திடீரென சத்த ஆரம்பித்தான்.

ஆதிகாலத்திற்கு முன்பு இயேசு கிறிஸ்துவை மொடலாக வைத்து வரைந்தீர்களே அதே ஆள் தான் நான்.

இப்ப இப்படி ஆகிவிட்டேன் என்றாராம்.இப்படி ஒரு கதை உண்டு.இந்த இளைஞனிடம் இருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன என்றால். தெய்வமாக உயர வேண்டிய மனிதன் தீய பழக்கவழக்கம் காரணமாக மிருகமாக தாழ்ந்து உள்ளான்.

அவர்களுக்கு எல்லாம் பாவ மன்னிப்புகிடைக்க வேண்டும். மறுபடியும் தெய்வமாக உயர வேண்டும். இப்போது எல்லாம் சில பேர் மன்னிக்க முடியாத அளவுக்கு பாவம் செய்கிறார்கள். சேர் என்றான்.அப்படி பாவம் செய்த ஒருவர் ஒரு பெரியவரிடம் போய் மன்னிப்பு கேட்டார். அதற்கு அவர் சொன்னார்.எஉன்னுடைய பாவத்தை என்னிடம் சொல்லி மன்னிப்பு கேட்கிறாய். என்னுடைய பாவத்தை நான் யாரிடம் சொல்லி மன்னிப்புக் கேட்பது என்றார்.

நீங்க எந்த பாவத்தை சொல்கிறீர்கள் சேர் என்றான் அவன்.நீ செய்த பாவத்தை மன்னிக்கிறேனே அந்த பாவத்தை சொன்னேனே என்றார் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடும் சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு இடையூறு

## தேசிய தொழிற்சங்க மூலம் சட்ட நடவடிக்கை எடுப்போம் என்கிறார் தலைவர் ஐங்கரன்

யாழ்மாவட்டத்தில் தொழிற் சங்க நடவடிக்கைகளில் ஈடுபடும் சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு இடையூறு மற்றும் அழுத்தம் கொடுக்கும் அதிகாரிகளுக்கு எதிராக தேசிய தொழிற்சங்கம் மூலம் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கவுள்ளதாக யாழ். மாவட்ட அகில இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி மற்றும் விவசாய ஆராய்ச்சி உதவி உத்தியோகத்தர்கள் சங்கத் தலைவர் ப. ஐங்கரன் தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

அகில இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி மற்றும் விவசாய ஆராய்ச்சி உதவி உத்தியோகத்தர் சங்கத்தால் கடந்த 29.06.2024ஆம் திகதி பத்து அம்ச கோரிக்கைகளை முன் வைத்து இக் கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றுமாறும் இல்லையேல் தொழிற் சங்க போராட்டத்தில் ஈடுபடுவோம் எனவும் தெரிவிக்கப் பட்டது.

அதில் குறிப்பாக திணைக் களதில் உள்வாங்குதல் தொடர்பான சுற்று நிரூப ஆலோசனைக்கு அமைய இணக்கம் தெரிவித்த உத்தியோகத்தர்களின் சம்பளத்தை குறைக்க நடவடிக்கை எடுத்தமை.மேற்படி விடயத்தினை அடிப் படையாகக் கொண்டு தீர்வுகளைக்காண்பதற்காக அதிமேதகு ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட பொதுநிர்வாக அமைச்சின் செயலாளரின் குழு அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள தீர்வாக விருப்பத்தினை மாற்றம் செய்தல் விடயம் நடைமுறைப்படுத்தாமை அரசாங்கத்தின் தீர்மானத்தின்படி திணைக் களத்தினுள் உள்வாங்கப்படும் போது அதிகாரசபை சேவைக் காலத்திற்குரிய ஊழியர் சேமலாப நிதியத்தில் ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட அரச பங்களிப்புத் தொகையினை (60%) மீண்டும் அரசாங்கம் வசூலிக்கும் போது 4% மேலதிக வட்டி அறவீடுசெய்தல்,

அண்ணளவாக 30 வருடங்கள் சேவைக்காலத்தினை கொண்ட சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு எந்த ஒரு பதவி உயர்வும் இல்லை. சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு உரித்தான MN 02 சம்பள அளவுத்திட்டம் வழங்கப்படாமை.

சமுர்த்தி திணைக்கள ஊழியர்கள் ஓய்வு பெறுவதன் காரணமாக ஏற்படும் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்யாமை.

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் பிரயாணச் செலவுகள் மற்றும் அலுவலகக் கொடுப்பனவுகள் அதி கரிக்கப்படாமை

தற்போதயை வாழ்கைச் செலவுடன் ஒப்பிடும்போது சமுர்த்தித் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு சம்பளங்கள் அதிகரிக்கப்படாமை.

சமுர்த்தி திட்டத்தின் பிரதான இலக்கினை அடைந்து கொள்வதற்குரிய வேலைத் திட்டங்களான சமுர்த்தி சமூக பாதுகாப்பு நிதியம், வீடமைப்பு நிதியம் மற்றும் கட்டாய சேமிப்பு நிதி என்பனவற்றினை புதிய அஸ்வெசும திட்டத்துடன் இடைநிறுத்தி சமுர்த்தி திட்டத்தினை குறைமதிப்பிற்கு உட்படுத்துதல் முறையான மற்றும் உறுதியான கணனி வலையமைப்பின் சமுர்த்தி வங்கிகள் இயங்கிக் கொண்டிருக்கும் போது சமுர்த்தி திட்டத்துக்குரிய நலனுதவி வேலை திட்டத்தினை பிற வங்கிகளினூடாக நடைமுறைப்படுத்துவதன் மூலம் சமுர்த்தி திட்டத்திற்கு பாரபட்சம் காட்டுதல், போன்ற விடயங்கள் நிறை வேற்றப்படாத காரணத்தினால் எமது சங்கம் தொழிற் சங்க நட வடிக்கையில் ஈடு படுவதென தீர்மானித்தது.

இதன்படி 2024-2026 வரையில் அமுல்படுத்தப்படவுள்ள குடும்ப வலுவூட்டல் தொடர்பான அனைத்து கடமைகளிலிருந்தும் விலகிக்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளது. மேற் குறித்த விடயங்களுக்குத் தீர்வு காணாவிட்டால் எதிர்வரும் காலங்களில் பாரிய தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்ள எமது சங்கம் தீர்மானித்துள்ளதாக சமுர்த்தி திணைக்களப் பணிப்பாளர் நாயகத்துக்கு கடிதமூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதுடன் இந்த தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடும் எமது உத்தியோகத்தர்களுக்கு அழுத்தங்கள் ஏற்படுத்த வேண்டாம் எனவும் அவ்வாறு அதிகாரிகளால் அழுத்தங்கள் ஏற்படுத்தப்படும் பட்சத்தில் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் யாழ் மாவட்டத்தில் இத் தொழிற்சங்க நடவடிக்கை தொடர்பாக யாழ்மாவட்ட அதிபருக்கும்.மாவட்ட பணிப்பாளருக்கும் (சமுர்த்தி) எழுத்து மூலம் தெரியப்படுத்தியிருந்த போதும் சில பிரதேச செயலக அதிகாரிகள் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு தொடர் அழுத்தங்கள் கொடுத்து வருவதாக முறைபாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. ஆதலால் குறித்த அதிகாரிகளுக்கு எதிராக தேசிய தொழிற்சங்கத்தின் மூலம் எதிர்வரும் காலங்களில் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளது என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## மஞ்சிஷ்டி

**Botanical Name- Rubia Cordifolia.**
**Family- Rubiaceae**

வளைந்து வளரக் கூடிய ஏறு கொடி, பல்லாண்டு வாழக் கூடியது. 3,000-7,000 அடி உயரமான நுவரெலியா, ஹற்றன்போன்ற இடங்களில் பசுமையான அடர்ந்த காடுகளில் வளரக் கூடியது. பொதுவாக தமிழ் மருந்துக் கடைகளில் பெற்றுக் கொள்ளலாம்.

இதனுடைய வேர், தண்டு இரண்டும் மருத்துவப் பண்புகள் நிறைந்தவை. இரத்தத்தை சுத்திகரிக்கக் கூடியதும், தோலைப் பாதுகாப்பாகவும், மிருதுவாகவும் வைத்திருக்கக் கூடியது. அத்துடன் பெண்களுக்கு மாதவிடாய் காலத்தில் ஏற்படும் வயிற்று வலியை நீக்கி மாதவிடாய் காலத்தில் ஏற்படும் இரத்தப் போக்கை சீராக பேணக் கூடியது.

முக அழகை பேணும் மூலிகைகளுள் மஞ்சிஷ்டி வேர் மிக மிக முக்கியமானது. இம் மரத்தின் தண்டு செவ்வள்ளிக் கொடி எனவும், வேர் மஞ்சிஷ்டி அழைக்கப்படும். மஞ்சிஷ்டி வேரில் Colouring Principles, PurPurin, Oxalic acid போன்ற முக்கிய வேதியற் சத்துக்கள் காணப்படும்.

இதனுடைய வேர்களை சேகரித்து நன்கு கழுவி உலர்த்தி இதன் 1 பங்கிற்கு 4 பங்கு நீர்விட்டு குடிநீர் காய்ச்சி 60 மில்லி அளவு காலை, மாலை சாப்பாட்டின் முன் எடுத்து வர இரத்தம் சுத்தியாவதுடன். தோல் தொற் றுக்கள் போன்ற எக்ஸிமா, ஒவ் வாமையால் ஏற்படும் சொறி, கடி போன்ற நிலைமைகள் நீங் கும். அல்லது மஞ்சிஷ்டி வேர்களைச் சேகரித்து நன்கு கழுவி உலர்த்திப் பொடித்து 4 கிராம் அளவு காலை, மாலை வெந்நீரில் எடுத்து வந்தாலும் மேற்



படி நோய்கள் நீங்கும்.

முகத்தில் பருக்கள், மருக்கள் காணப்பட்டால் மஞ்சிஷ்டி வேர்களை சேகரித்து நன்கு கழுவி உலர்த்தி காரமில்லாத மிக்ஸியில் போட்டு பொடித்து அரித்து தேவையான அளவு எடுத்து நீர் விட்டு குழைத்து முகத்தை நன்கு கழுவிய பின் ஈரமில்லாத முகத்தில் மேற்படி பசையை நன்கு பூசி 30 நிமிட நேர அளவு ஊறவிட்டு பின்பு முகத்தை நன்கு கழுவிவர படிப்படியாக முகப்பரு.மருக்கள் நீங்குவதுடன் தோல் மிருதுவாகவும் , கவர்ச்சியாகவும் மாறும். தினமும் 2,3 தடவை பூசலாம். சிலருக்கு உடம்பில் வியர்வை நாற்றம் மற்றும் அடிக்கடி தோல் தொற்று ஏற்படுபவர்கள் மஞ்சிஷ்டி வேர், வயதான வேம்பின் பட்டை இரண்டையும் சம அளவு எடுத்து நன்கு கழுவி உலர்த்தி பொடித்து,அரித்து வைத்துக் கொள்ள வேண்டும். குளியல் பொடியாக பயன்படுத்தி வர தோல் தொற்றுகள் முற்றாக நீங்கும் மேலும் பெண்களுக்கு மாதவிடாய் காலத்தில் ஏற்படும் வயிற்று வலி ,ஒழுங்கற்ற இரத்தப் போக்கு ஏற்பட்டால் மஞ்சிஷ்டி வேர் ,சாத்தாலாரி வேர்க் கிழங்கு இரண்டையும் சம அளவு எடுத்து 4 பங்கு நீர் விட்டு 1/4 பங்காக சுண்டக் காய்ச்சி 60 மில்லி அளவு காலை, மாலை 5-7 நாட்கள் எடுத்து வர குறி குணங்கள் குணமாகும்.மஞ்சிஷ்டி வேர் , சந்தனக்கட்டை சம அளவு எடுத்து நன்கு கழுவி உலர்த்தி, பொடித்து, அரித்து வைத்துக் கொள்ள வேண்டும். இதனை தீசுட்ட புண்களுக்கு தூய தேனில் கலந்து பூசி வர நன்கு ஆறும். மஞ்சிஷ்டி வேர் 300 கிராம் அளவு எடுத்து 300 மில்லி தூய தேங்காய் எண்ணெயில் மேற்படி மஞ்சிஷ்டி வேரை பொடித்து போட்டு பதத்தில் வடித்து ஆற விட்டு முகப்பரு மற்றும் நாட்டப்பட்ட தோல் நோய்களுக்கு பூசிவர நல்ல பலனைக் கொடுக்கும்.

### மஞ்சிஷ்டி தைலம்

தேங்காய் எண்ணெய் 1 லீற்றர், காய்ச்சாத பசும்பால் 1 லீற்றர் இரண்டையும் கலந்து ஒரு வாணலியில் இட்டு அடுப்பேற்றி சிறுதீயாக எரிக்க ஆரம்பித்துக் கொண்டு, 100 கிராம் மஞ்சிஷ்டி வேரை சிறு துண்டுகளாக்கி மேற்படி கலவையில் போட்டு தொடர்ந்து கிளறிக் கொண்டு அதே நேரம் 100 கிராம் கஸ் தூரி மஞ்சளை பொடித்து அரித்து அதையும் சேர்த்து தொடர்ந்து ஒன்றாக கலக்கி கொண்டே இருக்க வேண்டும். தீ அளவாக இருப்பதையும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.தைல பக்குவத்தில் நீர்த்தன்மையும் நீங்கிய பின்பு வடித்து ஆறவிட்டு ஈரமில்லாத போத்தலில் இட்டு வைத்துக் கொள்ள வேண்டும். இத் தைலம் 4-5 மணித்தியாலமளது நேரம் எடுக்கும். தயாரிப்பதற்கு பொறுமையாகத் தயாரிக்க வேண்டும். முக அழகிற்கு மிக முக்கிய மானது. அத்துடன் தோலை மிருதுவாக சுருக்கங்கள் ஏற்படாமல் தடுக்கவும். இந்த மஞ்சிஷ்டி தைலத்தை மசாஜ் தைலமாக பயன்படுத்தலாம்.



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

பொதுவாக சோறியாஸிஸ் என அழைக்கப்படும் காளாஞ்சுப்படை நோயிற்கு மீன் செதில் போன்று உரிந்து கொண்டு வருபவர்கள் மற்றும் சொறி இருப்பவர்கள் மஞ்சிஷ்டி குடிநீர், மஞ்சிஷ்டி வேர் பொடி முறையே 60 மில்லி காலை, மாலை பொடியில் 4 கிராம் காலை, மாலை தேனில் உட் பிரயோகத்திற்கு எடுத்துக் கொண்டு, அதேவேளை மஞ்சிஷ்டி தைலத்தை வெளிப் பிரயோகமாக பூசிவர நன்கு குணமாகும். எவ்விதமான தோல் தொற் றுக்களுக்கும் மஞ்சிஷ்டி வேர் சேர்ந்த மேற்படி இயற்கை கைம்மருந்துகள் சிறந்த பலனைக் கொடுக்கும்.

எந்த பக்க விளைவுகளும் இல்லாத மஞ்சிஷ்டி வேர், றோசா நிற இதழ்கள் இரண்டையும் சம அள்வாக எடுத்து தனித்தனியாக பொடித்து மீண்டும் இரண்டையும் சேர்த்து பொடித்து நீரில் குழைத்து முகத்தில் பூசி 30 நிமிடங்கள் ஊற விட்டு முகத்தை குளிரந்த நீரில் கழுவி வர முகத்திலுள்ள பருக்கள் கண்ணுக்கு கீழ் உள்ள கருவளையம் நீங்கி முகம் பளபளப்பாக பிரகாசிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 555





சிறிது நேரம் உட்கார்ந்தபடியே ஆடி விழுந்தான். பிறகு அப்படியே கொல்லன் உலைக்குப் பக்கத்தில், படுத்துத் தூங்கிப் போனான்.

தூக்கத்தில் வல்லவரையன் பல பயங்கரக் கனவுகள் கண்டான். கத்தியைப் பற்றியே ஒரு கனவு. ஒருவன் வந்து கொல்லனிடம் கத்தியைத் திரும்பக் கேட்டான். கொல்லன் கொடுத்தான். "என்ன கூலி வேண்டும்?" என்று அவன் கேட்டான். "கூலி ஒன்றும் வேண்டாம். பழுவூர் இளையராணிக்கு நான் அளிக்கும் காணிக்கையாயிருக்கட்டும்". என்றான் கொல்லன்.

"ஜாக்கிரதை! இந்த விடயம் யாருக்கும் தெரியக் கூடாது. முக்கியமாக, பழுவூர் இளையராணியின் பெயரைச் சொல்லவே சொல்லாதே! சொன்னால் என்ன செய்வோம் தெரியுமா?"

"நான் எதற்காக ஐயா, பழுவூர் ராணியின் பெயரைச் சொல்லப் போகிறேன்? ஒருவரிடமும் சொல்ல மாட்டேன்."

"இதோ இங்கே யாரோ ஒரு வாலிபன் படுத்திருக்கிறானே! சப்தம் போட்டுப் பேசுகிறாயே?" அவன் ஆழ்ந்த நித்திரையில் இருக்கிறான். இடிஇடித்தாலும் அவனுக்குக் காது கேட்காது.

ஒருவேளை அவனுக்குத் தெரிந்து விட்டது என்று தோன்றினால் இந்த உலைக் களத்தின் நெருப்பில் அவனைத் தூக்கிப் போட்டு வேலை தீர்த்துவிடு!

இந்தச் சம்பாஷணையின் முடிவில் கொல்லனும், கத்திக்கு உடையவனும் வந்தியத்தேவனை இழுத்துப் போய் உலைக் களத்தில் போடப் போவதாக வந்தியத்தேவன் கனவு கண்டான். பிறகு அந்தக் கனவு மாறியது.

வந்தியத்தேவனை யம தூதர்கள் நரகத்துக்கு அழைத்துச் சென்றார்கள். யம தர்மராஜன் பூலோகத்தில் வந்தியத்தேவனுடைய நடவடிக்கைகளைப் பற்றி விசாரித்தான். "பொய் சொல்வதில் இவன் நிபுணன். எத்தனை பொய்தான் சொல்லியிருக்கிறான் என்பதற்கு அளவே கிடையாது" என்றான் சித்திரகுப்தன் கையிலிருந்த ஓலையைப் பார்த்துவிட்டு.

"இல்லை, இல்லை! எல்லாம் சக்கரவர்த்தி குடும்பத்தாரின் சேவையிலேதான் சொன்னேன். எடுத்த காரியத்தைச் செய்து முடிப்பதற்காகச் சில பொய்களைச் சொன்னேன்."

"எதற்காகச் சொல்லியிருந்தாலும் பொய் பொய்தான். தள்ளுங்கள் இவனை நரகத்தின் பெரிய நெருப்புக் குழியில்!" என்றான் யமன். உடனே நரகத்தின் உட்புறத்திலிருந்து நூறாயிரம் குரல்கள் பயங்கரமாக ஊளையிட்டன.

யம தூதர்கள் அவனை அழைத்துப் போனார்கள். பயங்கரமாகக் கொழுந்து விட்டெரிந்த பெரு நெருப்பில் அவனைத் தள்ளுவதற்கு ஆயத்தம் செய்தார்கள். அந்த யம தூதர்கள் இருவரையும் பார்த்தால், முகங்கள் பழுவேட்டரையர்களின் முகங்களைப் போலிருந்தன. அதைப் பற்றி அவன் திடுக்கிட்டு நிற்கையில் குந்தவைதேவி அங்கே வந்தாள். "என்னுடைய கட்டளையை நிறைவேற்றுவதற்காகவே அவர் பொய் சொன்னார். ஆகையால், அவருக்குப் பதிலாக என்னை நெருப்பில் போடுங்கள்!" என்று கூறினாள்.

இந்தச் சமயத்தில் நந்தினி தேவியும் அங்கு எப்படியோ வந்து சேர்ந்தாள். "இரண்டு பேரையுமே சேர்த்து நெருப்பிலே போட்டு விடுங்கள்!" என்றாள் அந்தப் புண்ணியவதி. யம தூதர்கள் அவர்கள் இருவரையும் பிடித்து நெருப்பில் தள்ளப் போனார்கள். "ஐயோ வேண்டாம்" என்று வந்தியத்தேவன் அலறிக் கொண்டு திமிறினான் கண் விழித்து எழுந்து உட்கார்ந்தான். கண்டது கனவு என்ற எண்ணம் ஆறுதல் கொடுத்தது. ஆனால் எல்லாம் உண்மையாக நடந்தது போலவே தோன்றியபடியால் அவன் உடம்பு இன்னும் நடுங்கிக் கொண்டிருந்தது.

'சேச்சே! இனிமேல் எக்காரணத்திற்காகவும் பொய் சொல்லக்கூடாது' என்று தீர்மானித்துக் கொண்டான். "ரொம்ப நேரம் தூங்கிப் போய் விட்டேனா!" என்று கொல்லனைப் பார்த்துக் கேட்டான்.

(தொடரும்)





## சிறுவர் அரங்கம்

## மகிழ்ச்சியாக வாழ்ந்தவன்

ஒரு சிறிய நாடு. அந்த நாட்டின் அரசன் ஒரு சமயம் நோய் வாய்ப் பட்டிருந்தான். மருத்துவர்கள் பலர் வந்து பார்த்து, சிகிச்சை அளித்தனர்.

என்ன நோய் என்பதைக் கண்டுபிடிக்க இயலவில்லை. நோயும் குணமாகவில்லை. மிகவும் வருந்தினான் அரசன்.

"தன் நோயைக் குணப்படுத்துபவருக்கு நாட்டில் பாதியை அளிப்பதாக" அரசன் அறிவித்தான்.

ஆட்சியில் உள்ளவர்கள் கூடி ஆலோசித்தனர். எந்த வழியும் புலப்படவில்லை.

ஒரு அறிஞர் தனக்குத் தோன்றிய யோசனையைக் கூறினார்.

அதாவது "மகிழ்ச்சியோடு வாழ்க்கை நடத்தும் ஒரு மனிதனைக் கண்டுபிடித்து, அவனுடைய அங்கியை (சட்டை) கழற்றி வந்து, அரசனுக்கு அணிவித்தால், நோய் குணமாகிவிடும்" என்றார்.

கவலையில்லாமல் மகிழ்ச்சியோடு வாழும் மனிதனைக் கண்டு பிடித்து வருமாறு அரசன் உத்தரவிட்டான்.

காவலர்கள் நாடு முழுவதும் தேடி அலைந்தார்கள். ஆனால், அத்தகைய மனிதன் ஒருவன்கூட அகப்படவில்லை. வாழ்க்கையில் முற்றிலும் திருப்தியுடன் மன மகிழ்ச்சியோடு வாழும் ஒரு மனிதனைக் கூட நாட்டில் காணவில்லை.

பணக்காரனாக இருந்தால், அவனுக்கு உடல் நலமில்லை, உடல் நலத்தோடு இருப்பவனுக்குப் போதிய செல்வம் இல்லை. உடல் நலமும், பணமும் இருந்தால் பிள்ளைகள் இல்லையே என்ற கவலை. செல்வமும் உடல் நலமும் இருந்தால், மனைவி சரி இல்லை.

பொல்லாத மனைவியால், நாள் தோறும் சச்சரவு. நிம்மதி இல்லை. பிள்ளைகள் இருந்தால், தீயவர்களாக இருந்தனர். இப்படியாக, ஒவ்வொருவருக்கும் ஏதாவது ஒரு மனக் கவலை இருந்து கொண்டு இருந்தது.

ஒரு நாள், இரவில் அரசனின் குமாரன் ஒரு குடிசையின் பக்கம் போய்க் கொண்டிருந்தான். அப்போது அந்தக் குடிசையிலிருந்து ஒரு குரல் கேட்டது.

அதாவது "கடவுள் அருளால்இன்றைய வேலை முடிந்தது. வயிற்றுக்கும் போதுமான அளவு உணவு கிடைத்தது. இனி அமைதியாகப் படுத்து உறங்கலாம். இறைவன் கருணையே கருணை! எனக்கு வேறு என்ன வேண்டும்?"

இந்தக் குரலைக் கேட்டான் இளவரசன். அவனுக்கு மகிழ்ச்சி பொங்கியது. இளவரசன் காவலர்களை அழைத்து, அந்தக் குடிசைக்குள்ளே இருந்த மனிதனின் சட்டையைக் கொண்டு வந்து அரசனிடம் அளிக்கும்படி உத்தரவிட்டான். மேலும், அந்தக் குடிசைவாசி எவ்வளவு கேட்டாலும் அதைக் கொடுக்கும்படி சொன்னான். காவலர்கள் உடனே அந்த ஏழையின் குடிசைக்குள் சென்றனர்.

அங்கே கவலை இல்லாமல், கடவுளை வழிபாடு செய்து கொண்டிருந்த ஒரு மனிதனைக் கண்டனர். ஆனால், அவன் மிகவும் ஏழ்மையில் இருந்தான். அவனிடம் சட்டை எதுவும் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை என்பது சூரியனைப் போன்றது, அதன் பிரகாசத்தை சதா வெளிப்படுத்திக் கொண்டே இருக்கும்.
– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மகிந்த ராஜபக்ஷவை எதிர்த்து பொன்சேகாவுக்கு வாக்களித்தது ஏன்?

வழுவழுத்த உறவை விட வைரம் பாய்ச்சிய பகை மேல் என்கிறது நம் தமிழ் மொழி.

ஆம், இந்த நாட்டின் ஆட்சியில் இருந்தவர்களில் மகிந்த ராஜபக்ஷவும் அவரின் பரிவாரங்களுமே தமிழ் மக்களுக்கு மிக மோசமான கொடுமையைச் செய்தவர்கள்.

வன்னி யுத்தத்தின்போது பல்லாயிரக் கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்டனர்.

ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் காணாமல் ஆக்கப்பட்டனர். அந்த நெட்டூரத்தின் துயரத்தை இன்றுவரை நம் தமிழ் மக்கள் அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர்.

இதனிடையே மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் இனந்தெரியாதவர்கள் நடத்திய துப்பாக்கிச் சூடுகள் கொஞ்சமல்ல. எந்த நேரமும் மரண பயத்துடனேயே தமிழ் மக்கள் உயிர் வாழ்ந்தனர்.

யுத்தம் முடிந்து சுமார் மூன்று இலட்சம் தமிழ் மக்களை முட்கம்பி வேலிக்குள் அடைத்து உலகில் எங்கும் நடக்காத கொடூரத்தனத்தை நடத்திய மகிந்த ராஜபக்ஷ, தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு இம்மியும் முற்பட்டாரில்லை.

உண்மை. விடுதலைப் புலிகளுடன் யுத்தத்தை நடத்திய மகிந்த ராஜபக்ஷ தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண முற்பட்டிருந்தால், அதனைச் சிங்கள மக்கள் ஒருபோதும் எதிர்த்திருக்கமாட்டார்கள்.

ஆனால் தமிழ் மக்களைக் கொன்றொழித்து அவர்களை முட்கம்பி வேலிக்குள் அடைத்ததை வெற்றி விழாவாகக் கொண்டாடுவதிலேயே மகிந்த ராஜபக்ஷவும் அவர் தரப்பும் தீவிரமாக இருந்தன.

இந்நிலையில் ஜனாதிபதித் தேர்தல் வந்தபோது மகிந்த ராஜபக்ஷவும் இராணுவத் தளபதியாக இருந்த சரத் பொன்சேகாவும் போட்டியிட்டனர்.

தமிழ் மக்களுக்கு எதிரான போரில் சரத் பொன்சேகா தலைமை தாங்கியிருந்தபோதிலும் மகிந்த ராஜபக்ஷவை எதிர்க்க வேண்டும் என்ற ஒரே காரணத்துக்காக தமிழ் மக்கள் சரத் பொன்சேகாவுக்கு வாக்களித்தனர். இது கடந்த கால வரலாறு.

நிலைமை இதுவாக இருக்கையில், இப்போது ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் நாமல் ராஜபக்ஷ தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் சேர்ந்து பணியாற்றவும் வடக்கு கிழக்கிலுள்ள பிரச்சினையைத் தீர்த்து வைப்பேன் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனிடம் கூறியுள்ளாராம்.

எப்படி இருக்கிறது நிலைமை. அன்று நீங்கள் செய்த அக்கிரமத்தால் இன்னமும் கண்ணீரும் கம்பலையுமாக நம்மவர்கள் இருக்கும்போது, வடக்கு கிழக்கு மக்களின் பிரச்சினையை நாமல் ராஜபக்ஷவால் எப்படித் தீர்க்க முடியும்.

ஆக, அவர்கள் எதைக் கூறினாலும் அதை நாம் அப்படியே உள்வாங்குவோமாயின் அன்று சரத் பொன்சேகாவுக்கு தமிழ் மக்கள் வாக்களித்தது ஏன்? என்ற கேள்வி மீளெழும்.

# ஐ.எம்.எப்புடன் கலந்துரையாடியபின் வரி தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வு

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

*(கொழும்பு)*

வரி தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடியதன் பின்னர் தீர்வு காணப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற சந்திப்பில் ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது, சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கப்பாடுகள் காணப்படுவதுடன் கருத்து வேறுபாடுகளும் காணப்படுகின்றன.

2023 மற்றும் 2024 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் வரி அதிகரிப்பால் கடினமான காலமாக இருந்தது. இப்போது பொருளாதாரம் படிப்படியாக மேம்பட்டு வருகிறது. முதன்மை பட்ஜெட் உபரியை பராமரிக்க முடிந்தது. இந்த நடவடிக்கை தனியார் துறையை பாதிக்கிறது.

IMF உடன் 6 மாதங்களுக்கு ஒருமுறை விவாதங்கள் நடத்தப்படும். மேலும் வளர்ச்சி காணப்பட்டது. வரிச் சிக்கல்களைத் திருத்த IMF உடனான பேச்சுவார்த்தை சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்பாடு மற்றும் கருத்து வேறுபாடுகள் உள்ளன.

வரும் ஆண்டில் அன்னிய கையிருப்பு குறையும். வாகனங்கள் இறக்குமதி தொடங்கும் போது அது நடக்கும்.

ஆனால் கார் இல்லாமல் இருக்க முடியாது. வருவாயில் பெரும் பகுதி வாகன வரி மூலம் வருகிறது.

அடுத்த ஆண்டு மத்தியில் நல்ல முன்னேற்றம் ஏற்படும் என்றார். (ம)

பெரமுன வேட்பாளராக

## தினேஸ் குணவர்த்தன, காமினி லொகுகே தொடர்பில் ஆராய்ந்திருந்தோம் - பசில்

*(கொழும்பு)*

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி சார்பில் வேட்பாளராக நியமிப்பதற்காக தினேஸ் குணவர்த்தன, காமினி லொகுகே உட்பட பலர் தொடர்பில் ஆராய்ந்தோம் என தெரிவித்த முன்னாள் நிதியமைச்சர் பசில்ராஜபகஷ, விஜேயதாசவை கூட ஆதரித்திருப்போம் என குறிப்பிட்டுள்ளார்.

வேட்பாளர் போட்டியிலிருந்து தம்மிக்க பெரேரா விலகிய பின்னர் நாங்கள் பல பெயர்களை ஆராய்ந்தோம். பிரதமர் தினேஸ் குணவர்த்தன, எம்.பி காமினிலொகுகே கட்சியின் பொதுச்செயலாளர் சாகரகாரியவசம் ஆகியோரை வேட்பாளராக நிறுத்துவது குறித்து ஆராய்ந்தோம்.

கட்சியின் பிரதேச அமைப்புகள் வேண்டுகோள் விடுத்ததன் காரணமாக நாமல் ராஜபக்ஷவை நியமிக்க தீர்மானித்தோம்.

எங்களிடம் தகுதியான ஏனைய வேட்பாளர்கள் இருந்தனர். விஜேயதாச ராஜபக்ஷவை கூட நாங்கள் ஆதரித்திருப்போம், அவர் வேறு கட்சியின் கீழ் போட்டியிட்டாலும் அவர் இன்னமும் பாராளுமன்றத்தில் மொட்டுக் கட்சி உறுப்பினரே என பசில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கட்சியின் முடிவை நிராகரித்து ரணிலிற்கு ஆதரவளித்தவர்களை கட்சியில் இருந்து வெளியேற்ற வேண்டும் என மாவட்ட மட்ட பிரதிநிதிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அவ்வாறான முடிவை எடுத்தால் நீதிமன்றம் அதற்கு ஆதரவளிக்கும் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இருப்பினும் மகிந்த ராஜபகஷவும், பசில் ராஜபக்ஷவும் இது அதற்கான நேரமில்லை என தெரிவித்துள்ளனர்.

தற்போதைக்கு நாங்கள் தேர்தல் தொடர்பில் கவனம் செலுத்துவோம். பலர் தங்கள் தவறுகளை உணர்ந்து மீள வருவார்கள் என நான் உறுதியாக நம்புகின்றேன் எனவும் பசில் ராஜபகஷ தெரிவித்துள்ளார். (ம)

## லொறியுடன் மோதி மோ.சைக்கிள் விபத்து

### ஒருவர் உயிரிழப்பு

அம்பேபுஸ்ஸவிலிருந்து அலவ்வ நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து எதிரே வந்த லொறியுடன் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிள் சாரதி உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் சாரதி அலவ்வ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக வரகாபொல வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் 19 வயதுடைய வரகாபொல, தும்பலியத்த பிரதேசத்தை சேர்ந்தவர் ஆவார்.

உயிரிழந்தவரின் சடலம் வரக்காபொல வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

விபத்து சம்பவம் தொடர்பில் வரக்காபொல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம)

## மஹியங்கனை வீதியில் சடலம் ஒன்று மீட்பு

*(கொழும்பு)*

மொனராகலை, பிபில - மஹியங்கனை பிரதான வீதியிலிருந்து சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளதாக ரிதிமாலியத்த பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

சடலமாக மீட்கப்பட்ட நபர் ஊரணிய 12ஆம் கட்டையைச் சேர்ந்த 60 வயதுடையவரெனப்பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இரவு குறித்த பகுதியில் உள்ள மரண வீடொன்றில் இரவு 11 மணியளவில் ஏற்பட்ட வாக்குவாதம் மோதலாக மாறி, ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், சடலமாக மீட்கப்பட்ட நபர் மரண வீட்டில் ஏற்பட்ட கைகலப்பில் உயிரிழந்து இருக்கலாம்எனப் பொலிஸார் சந்தேகிப்பதோடு பல கோணங்களில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ம)

## கற்பாறை சரிந்ததில் குடும்பஸ்தர் மரணம்

*(கொழும்பு)*

அம்புலுவாவ மலைப் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் மீது கற்பாறை சரிந்து வீழ்ந்ததில் அவர் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

4 பேர் கொண்ட குழுவினர் மலை ஏறிக் கொண்டிருந்தபோதே, அவர்களில் ஒருவர் மீது கற்பாறை வீழ்ந்து உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் தெஹியோவிட்ட முருத்தெட்டுவே பகுதியைச் சேர்ந்த 37 வயதுடையவர் என்றும் அவருக்கு இரண்டு பிள்ளைகள் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகள் மேற்கொண்டபோது, விபத்துக்குள்ளான குடும்பஸ்தர் மனைவியிடம் கூறாமல் தனது நான்கு நண்பர்களுடன் சுற்றுலா சென்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜனாதிபதித் தேர்தல் 2024 செப்டெம்பர் 21
# கடந்தகால ஜனாதிபதித் தேர்தல்கள் பற்றிய ஒரு மீள் பார்வை

**கலாநிதி க. தவலிங்கம்**
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

**07**

இந்த அடிப்படையில் நோக்கும் பொது ஜனாப் அப்துல் றசூல் அவர்கள் ஜனாதிபதித் தேர்தலொன்றில் போட்டியிட்ட இரண்டாவது சிறுபான்மை அபேட்சகராகின்றார்.

4 ஆவது ஜனாதிபதித் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் 1999. 12. 18ஆம் திகதி நள்ளிரவுடன் முடிவடையவிருந்தன. இச்சந்தர்ப்பத்தில் பொதுசன ஐக்கிய முன்னணியின் இறுதிப் பொதுக்கூட்டத்திலும் ஜாஎல பிரதேசத்தில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுக் கூட்டமொன்றிலும் தற்கொலைப் படையாளிகளின் குண்டுகள் வெடித்த சம்பவம் நாட்டு மக்கள் மத்தியில் ஒருவித பரபரப்பை ஏற்படுத்தியது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அவர்கள் கலந்து கொண்ட கொழும்பு மாநகரசபை மைதான பொதுக் கூட்டத்தில் தற்கொலைப் பெண் போராளியொருவரினால் வெடிக்கவைக்கப்பட்ட குண்டினால் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெய்வாதீனமாக உயிர்தப்பினார். அதேநேரம் ஜாஎலவில் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரசாரக் கூட்டத்தில் வெடித்த குண்டினால் மேஜர் ஜெனரல் லகி அல்கம உட்பட 13 பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் 46 பேர் காயமடைந்து வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர்.

மேற்படி இரண்டு குண்டு வெடிப்பு சம்பவங்களும் தேர்தல் நடைபெற இரண்டு தினங்களுக்கு முன்பு இடம்பெற்றதினால் மக்கள் மத்தியில் பெரும்பரபரப்பு ஏற்பட்ட அதேநேரத்தில் தெய்வாதீனமாக உயிர்தப்பிய சந்திரிகா மீது அனுதாப அலைகளும் ஏற்படலாயிற்று என்றால் அது மிகையாகாது. 1999 12, 18 ஆம் திகதி குண்டு வெடிப்பு சம்பவங்கள் இடம்பெற்ற போதிலும் கூட தேர்தல் திட்டமிடப்பட்டபடி 1999. 12. 21ஆம் திகதி காலை 7.00 மணிமுதல் பி. ப. 4.00 மணி வரை இலங்கை பூராவும் நிறுவப்பட்டிருந்த 9,912 வாக்கெடுப்பு நிலையங்களிலும் நடைபெறுமென அறிவிக்கப்பட்டது. இத்தேர்தலில் 11,779,246 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர்.

தேர்தல் தினத்தன்று சில அசம்பாவிதங்கள் இடம்பெற்றன எனக் கூறப்பட்ட போதிலும் கூட தேர்தல் பொதுவாக அமைதியாகவும் நேர்மையாகவும் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவு நிர்வாக மாவட்டத்தில் 44 வாக்கெடுப்பு நிலையங்களிலும், கிளிநொச்சி நிர்வாக மாவட்டத்தில் 49 வாக்கெடுப்பு நிலையங்களிலும் தேர்தல்கள் நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்த அதேநேரத்தில் இப்பகுதிகளின் பாதுகாப்பு நிலைகளைக் கருத்திற்கொண்டு வாக்களிப்பு நிறுத்தப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

இத் தேர்தலில் 11,779,180 வாக்காளர்கள் அகில இலங்கை ரீதியில் வாக்களிக்கத் தகுதிபெற்றிருந்தனர். இவர்களுள் 8,635,290 வாக்காளர்கள் (73.32%) வாக்களித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். 3ஆம் உலக நாடொன்றில் 73.32% வாக்காளர்கள் வாக்களித்தல் என்பது சிறப்பான அம்சமாகும்.

அதேநேரம் 1982ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் 81.06% வாக்காளர்களும், 1988 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் 55.32% வாக்காளர்களும், 1994 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் 70.52% வாக்காளர்களும் வாக்களித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

தேர்தலில் திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்கள் 4,312,157 வாக்குகளைப் பெற்று வெற்றிவாகை சூடினார். இது செல்லுபடியான வாக்குகளில் 51.12% ஆகும். இத்தேர்தலில் சந்திரிகாவுக்கு பெரும் சவாலாக இருந்த ரணில் விக்கிரமசிங்க அவர்கள் 3,602,748 வாக்குகளைப் பெற்று இரண்டாமிடத்தைப் பெற்றுக் கொண்டார்.

இது செல்லுபடியான வாக்குகளில் 42.71% வாக்குகளாகும். இலங்கை அரசியலமைப்பு விதிகளுக்கமைய ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட வேண்டிய வேட்பாளர் அளிக்கப்பட்ட செல்லுபடியான வாக்குகளில் 50% இற்கு மேல் பெற்றாக வேண்டும். இதற்கமைய 1999 %ஆம் ஆண்டு தேர்தல் முடிவுகளின்படி 4,217,878 வாக்குகளை குறைந்தபட்ச வாக்குகளாகப் பெறுவது அவசியம். ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குறைந்தபட்ச வாக்குகளை விட 94,279 வாக்குகளை அதிகமாகப் பெற்றிருந்த அதேநேரத்தில் இரண்டாமிடத்தை அடைந்த ரணில் விக்கிரமசிங்க அவர்களை விட 709,409 வாக்குகளை மேலதிகமாகப் பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

1994 %ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் திருமதி சந்திரிகா குமாரதுங்க 4,709.205 வாக்குகளை அதாவது 62.28% வாக்குகளைப் பெற்றிருந்தார் என்பதைக் குறித்துக் காட்ட வேண்டும்.

### 4வது ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் -1999

| வேட்பாளர் | கட்சி | வாக்குகள் | % |
|---|---|---|---|
| சந்திரிக்கா குமாரதுங்க | பொதுஜன ஐக்கிய முன்னணி | 4,312,157 | 51.12% |
| ரணில் விக்கிரமசிங்க | ஐக்கிய தேசியக்கட்சி | 3,602,748 | 42.71% |
| நந்தன குணதிலக | மக்கள் விடுதலை முன்னணி | 344,173 | 4.08% |
| ஹரிச்சந்திர விஜேதுங்க | சிங்களயே மகசம்மத பூமிபுத்திர கட்சி | 35,854 | 0.43% |
| டபிள்யு.வி.எம். ரஞ்சித் | சுயேட்சை | 27,052 | 0.32% |
| ராஜீவ விஜேசிங்க | லிபரல் கட்சி | 25,085 | 0.30% |
| வாசுதேவ நாணயக்கார | இடதுசாரி ஜனநாயக முன்னணி | 23,668 | 0.28% |
| டெனிசன் எதிரிசூரிய | சுயேட்சை | 21,119 | 0.25% |
| அப்துல் ரசூல் | ஸ்ரீலங்கா முஸ்லிம் கட்சி | 17,359 | 0.21% |
| கமல் கருணாதாச | மக்கள் விடுதலை ஒற்றுமை முன்னணி | 11,333 | 0.13% |
| ஹட்சன் சமரசிங்க | சுயேட்சை | 7,184 | 0.09% |
| ஆரியவங்ஸ திசாநாயக்க | ஜனநாயக ஐக்கிய தேசிய் முன்னணி | 4,039 | 0.05% |
| அல்விஸ் வீரக்கொடி பிரேமவர்தன | மக்கள் சுதந்திர ஒற்றுமை முன்னணி | 3,983 | 0.05% |
| செல்லுபடியான வாக்குகள் | | 8,435,754 | 97.69% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | | 199,536 | 2.31% |
| மொத்தமாக வாக்களித்தவர்கள் | | 8,635,290 | 73.31% |

### 4வது ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் -1999

வட மாகாணம்

| | யாழ் மாவட்டம் | | வன்னி மாவட்டம் | |
|---|---|---|---|---|
| வேட்பாளர் | வாக்குகள் | % | வாக்குகள் | % |
| சந்திரிக்கா குமாரதுங்க | 52,043 | 46.65% | 16,202 | 25.84% |
| ரணில் விக்கிரமசிங்க | 48,005 | 43.03% | 43,803 | 69.87% |
| நந்தன குணதிலக | 413 | 0.37% | 482 | 0.77% |
| ஹரிச்சந்திர விஜேதுங்க | 818 | 0.73% | 93 | 0.15% |
| டபிள்யு.வி.எம். ரஞ்சித் | 1,873 | 1.68% | 420 | 0.67% |
| ராஜீவ விஜேசிங்க | 1,368 | 1.23% | 456 | 0.73% |
| வாசுதேவ நாணயக்கார | 3,394 | 3.04% | 444 | 0.71% |
| டெனிசன் எதிரிசூரிய | 831 | 0.74% | 234 | 0.37% |
| அப்துல் ரசூல் | 1,041 | 0.93% | 306 | 0.49% |
| கமல் கருணாதாச | 487 | 0.44% | 83 | 0.13% |
| ஹட்சன் சமரசிங்க | 552 | 0.49% | 69 | 0.11% |
| ஆரியவங்ஸ திசாநாயக்க | 340 | 0.30% | 40 | 0.06% |
| அல்விஸ் வீரக்கொடி பிரேமவர்தன | 403 | 0.36% | 58 | 0.09% |
| செல்லுப்படியான வாக்குகள் | 111,568 | 94.91% | 62,690 | 97.68% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 5,981 | 5.09% | 1,490 | 2.32% |
| மொத்தமாக வாக்களித்தவர்கள் | 117,549 | 19.18% | 64,180 | 31.23% |

### 4வது ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் -1999

கிழக்கு மாகாணம்

| | மட்டக்களப்பு மாவட்டம் | | திகாமடுல்லை மாவட்டம் | | திருகோணமலை மாவட்டம் | |
|---|---|---|---|---|---|---|
| வேட்பாளர் | வாக்குகள் | % | வாக்குகள் | % | வாக்குகள் | % |
| சந்திரிக்கா குமாரதுங்க | 58,975 | 34.66% | 149,593 | 55.59% | 56,691 | 44.96% |
| ரணில் விக்கிரமசிங்க | 104,100 | 61.19% | 109,805 | 40.80% | 63,351 | 50.25% |
| நந்தன குணதிலக | 290 | 0.17% | 4,068 | 1.51% | 2,307 | 1.83% |
| ஹரிச்சந்திர விஜேதுங்க | 250 | 0.15% | 344 | 0.13% | 218 | 0.17% |
| டபிள்யு.வி.எம். ரஞ்சித் | 1,528 | 0.90% | 1,275 | 0.47% | 735 | 0.58% |
| ராஜீவ விஜேசிங்க | 1,838 | 1.08% | 1,193 | 0.44% | 713 | 0.57% |
| வாசுதேவ நாணயக்கார | 884 | 0.52% | 473 | 0.18% | 476 | 0.38% |
| டெனிசன் எதிரிசூரிய | 784 | 0.46% | 823 | 0.31% | 477 | 0.38% |
| அப்துல் ரசூல் | 750 | 0.44% | 663 | 0.25% | 599 | 0,48% |
| கமல் கருணாதாச | 331 | 0.19% | 519 | 0.19% | 245 | 0.19% |
| ஹட்சன் சமரசிங்க | 234 | 0.14% | 171 | 0.06% | 128 | 0.10% |
| ஆரியவங்ஸ திசாநாயக்க | 78 | 0.05% | 93 | 0.03% | 72 | 0.06% |
| அல்விஸ் வீரக்கொடி பிரேமவர்தன | 89 | 0.05% | 80 | 0.03% | 69 | 0.05% |
| செல்லுப்படியான வாக்குகள் | 170,131 | 97.85% | 269,100 | 98.34% | 126,081 | 97.95% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 3,747 | 2.15% | 4,549 | 1.66% | 2,642 | 2.05% |
| மொத்தமாக வாக்களித்தவர்கள் | 173,878 | 64.35% | 273,649 | 79.59% | 128,723 | 63.78% |

## ஐந்தாவது ஜனாதிபதித் தேர்தல்- 2005

ஐந்தாவது ஜனாதிபதி தேர்தல் 2005ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17 ஆம் திகதி நடைபெற்றது. இதற்கிணங்க பின்வரும் 13 அபேட்சகர்கள் தமது வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தனர்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 51 தேர்தல்...

ரம் 51 தேர்தல் முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக ஆணைக்குழு சுட்டிக் காட்டியுள்ளது.

ஜூலை மாதம் 31ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் வரை 320 தேர்தல் முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ம)

## பூநகரி...

பாட்டை இழந்து வீதியை விட்டுச் சென்று விபத்து இடம்பெற்றிருக்கலாம் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்திற்கான காரணம் தொடர்பாக பூநகரிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-113,315,316)

## தேசிய பாது...

தாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

மொனராகலையில் நடைபெற்ற பிக்குமார் ஆலோசனை சபையில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய பொருளாதார முறைமை தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்படுமாயின் மீண்டும் நாடு வரிசை யுகத்துக்குச் செல்லக்கூடும்.

மக்களுக்கு வாழக்கூடிய சூழலை உருவாக்குவதன் மூலமே நாடு வங்குரோத்திலிருந்து விடுபட்டுள்ளதாகக் கூறமுடியும்.

இந்தநிலையில், நாட்டுக்கும் நாட்டு மக்களின் நலன் கருதியும் தேசிய பாதுகாப்புக் கொள்கையொன்று உருவாக்கப்படும்என எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். (ம)

## தேர்தலுக்கு...

உள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

யட்டியந்தோட்டையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதித் தேர்தலுக்கான செலவின மதிப்பீடு 100 கோடி ரூபாயை தாண்டவில்லை எனவும் 10 பில்லியன் தான் வரம்பு எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தலுக்காக 10 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தேர்தல் ஆணையம் குறிப்பிட்டுள்ளது. சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்குப் பிறகு இன்னும் பணம் மீதம் உள்ளது. அச்சிடுதல், பாதுகாப்பு மற்றும் போக்குவரதுப் போன்ற செலவுகளைத் தவிர, அதிகாரிகளின் கொடுப்பனவுகள் போன்ற சில செலவுகள் உள்ளன என்று அமைச்சர் கூறினார்.

தேர்தலுக்கான நிதி குறித்து நிதி அமைச்சகம் எந்த சந்தேகமும் கொள்ளக்கூடாது, ஏனெனில்செலவு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பிறகு பணம் வழங்கப்படும் என்று அவர் மேலும் கூறியுள்ளார். (ம)

## ராஜபக்ஷ...

பாட்டைக் கொண்டுள்ளனர்.

முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷவும், இராஜாங்க அமைச்சர் சசீந்திர ராஜபக்ஷவும் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவளிப்பதுடன் அவருக்கே கட்சி ஆதரவளிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டைக் கொண்டுள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மகிந்த ராஜபக்ஷவின் ஏனைய புதல்வர்களும் இதே நிலைப்பாட்டைக் கொண்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகின்றன.

யோசித ரோகிதவின் சந்தைப்படுத்தல் நிறுவனத்தை சேர்ந்த குழுவிடம் ரணில் விக்கிரமசிங்கவின் பிரசாரத்தை முன்னெடுக்கும் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ம)

## தமிழ்த் தேசிய...

தலைவர்களுக்கும் இன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்புக்கு ஜனாதிபதி செயலகப் பிரதிநிதிகளால் தொலைபேசி மூலம் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த சந்திப்பில், தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பு என்ற அடிப்படையில் 14 உறுப்பினர்களும் கலந்து கொள்ளமாட்டார்கள் எனவும் தேர்தல் பணிகளில் மூழ்கி இருப்பதால், குறுகிய கால அழைப்பின் அடிப்படையில் இன்றைய சந்திப்பில் தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பாக கலந்து கொள்வது சிரமம் எனத் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பின் பிரதிநிதிகள் தீர்மானித்துள்ளனர்.

அத்துடன், எதிர்காலத்தில் இது போன்ற அழைப்புகளை ஏற்று சந்திப்புக்களில் கலந்து கொள்வது தொடர்பான முடிவைப் பொதுக் கட்டமைப்பு கூடி முடிவெடுக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-33)

*(இது தொடர்பில் முன்னர் வெளியான செய்தி உள்ளே)*

## அதிகாரப்...

தமிழரசுக் கட்சியின்மத்திய குழுக்கூட்டம் நேற்று வவுனியாவில் நடைபெற்றது.

கூட்டம் முடிவில் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்த சுமந்திரன் எம்.பி,

தமிழ் மக்கள் சார்பாக தமிழ் மக்களின் பிரதான அரசியல் கட்சியான தமிழரசுக் கட்சியினுடைய நிலைப்பாடானது இணைந்த வட கிழக்கிலே சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப் பகிர்வுடைய ஆட்சி முறை ஏற்படுத்தப்படுவதாகும்.

இதுவே எங்களுடைய அரசியல் நிலைப்பாடு. இதற்கு ஜனாதிபதி வேட்பாளர்கள் யாராவது இணங்கி வந்தால் அவர்களுக்கு ஆதரவு அளிக்கலாம் என்ற கருத்தும் கூட்டத்திலே சொல்லப்பட்டிருக்கிறது.

எனினும் இது தொடர்பில் தீர்மானம் எதுவும் எடுக்கவில்லை.

எமது கோரிக்கை தொடர்பில் ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு நாம் கூறி இருப்பதானது, அவர்களுடைய அரசியல் அறிக்கையில் எவ்வாறான செய்தியை சொல்கிறீர்கள் என்று நாம் பார்க்கப் போகின்றோம்.

இது தொடர்பில் முழு நாட்டிற்கும் அவர்கள் எண்ணத்தை சொல்ல வருகிறார்கள் என்பது தொடர்பிலும் நாங்கள் பார்க்க இருக்கிறோம்.

எமது கோரிக்கைகளை ஏற்றால் அது தொடர்பில் விசேஷமாக சிங்கள மக்களுக்கு அவர்கள் தமிழர்களுக்கு எதைச் செய்யப் போகிறோம் என்பதையும் அறிவிக்க வேண்டும்.

இது தவிர நாங்களும் எங்களுடைய நிலைப்பாட்டை எழுத்து வடிவில் தெளிவான ஒரு அறிக்கையாக வெளியிடுவோம். எங்களுடைய மக்களுக்கு மக்களுடைய அரசியல் தலைமைத்துவம் வழங்குகின்ற கட்சி என்ற நிலைப்பாட்டில் அவ்வாறான ஒரு பொறுப்பை நாமும் உதாசீனம் செய்யாமல் வழி காட்டல் அறிக்கை ஒன்றை ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் வெளியிடுவோம் என்றார். (ம)

## ரணிலுடன்...

முழுமையாக அமுல்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடுவதற்காக அழைப்புவிடுத்துள்ளார். இந்நிலையில் பல்வேறுபட்ட பிரச்சினைகளும் தமிழர் தரப்பாக கலந்துரையாட வேண்டி இருப்பதன் காரணமாகவும் அவர் தற்போதைய ஜனாதிபதி என்ற ரீதியிலும் அவருடன் கலந்துரையாட நாம் தீர்மானித்துள்ளோம்.

இதன்போது பயங்கரவாத தடைச் சட்ட விடயம், அரசியல் கைதிகளின் விடுதலை போன்ற விடயங்களிலும் நாம் கரிசனை காட்டுவோம் என தெரிவித்துள்ளார். (ம)


மஹஜன சம்பத — திகதி 2024.08.11 — சீட்டிழுப்பு இலக்கம் 5562 — L 5 8 4 2 1 8
அத சம்பத — L 4 2 1 8 — சீட்டிழுப்பு இலக்கம் 137
National Lotteries Board

தன நிதானய — திகதி - 2024.08.11 — சீட்டிழுப்பு இலக்கம் - 1592 — K 12 17 29 50 K — Double Chance 63505

மெகா பவர் — திகதி 11/08/2024 — சீட்டிழுப்பு இலக்கம் 1910 — I 18 04 34 45 57 — 16079

லக்கி 7 VIP — திகதி 2024.08.11 — சீட்டிழுப்பு இலக்கம் 0388 — K 1 0 6 6 1 5 K

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3804 — சீட்டிழுப்பு திகதி 11.08.2024 — Z 02 13 14 35 — Z — 79229

HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2024.08.11 — சீட்டிழுப்பு இலக்கம் 0871 — மிதுனம் 09 15 36 53 மிதுனம் — 05525 — 02

உத்தியோகபூர்வ முடிவுகள் — 11.08.2024 — வெற்றி வாரம் 270 — S 2 0 4 8 8 7 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 23,409,848.00 — 31633 — DLB

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2536 — ஆரஞ்சு நிறம் — சீட்டிழுப்பு திகதி 11.08.2024 — தினம் ஞாயிறு — 11 35 55 64 V — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,346,225,60 — DLB

சனிதா — 2024.08.11 — வெற்றி வாரம் 4697 — 12 35 41 43 F — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 68,144,291.60 — ரூ.100,000/- 70576 — DLB

சசிரி — வெற்றி வாரம் 514 — 2024.08.11 — 16 23 25 — கபிலம் — 06 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத்தொகை ரூ. 2,330,360/- — DLB

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4248 — வர்ணம் ஊதா — சீட்டிழுப்பு திகதி 2024.08.11 — தினம் ஞாயிற்றுக்கிழமை — 13 15 47 55 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,495,628.00 — 107100 — DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — T 01 02 28 48 61 — சுப்பர் இலக்கம் — 1712 — மஞ்சள் — 11.08.2024 — ஞாயிறு — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 538,418,606.20 — DLB

ADA KOTIPATHI — ஞாயிற்றுக்கிழமை — வெற்றி வாரம் : 2362 — 2024.08.11 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ 57,909,623.20 — 20 36 66 70 C — ரூ.100,000/- 424764 — DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விசாக்கான (Show money)**

வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.

**1%**
- Visit visa
- Student visa
- Fixed & saving
- லட்சத்திற்கு 1000 மட்டுமே

சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்

தொடர்புகளுக்கு:

**075 033 6759** (216)

**வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை**

- சகல நாடுகளுக்குமான துரித கடிதங்கள் பொதிகள் சேவை.
- உணவுப் பொருட்கள், மருந்து வகைகள், எண்ணெய் வகைகள், கருவாடு என்பன எம்மூடாக அனுப்பிட முடியும்.
- கடிதங்கள் 3 நாட்களில் ஒப்படைக்கப்படும்.

திருமுருகன் பொதிகள் சேவை
321, K.K.S Road, Jaffna
208, Galle Road, Colombo - 06
**077 755 4528** (242)

**Care Giver - பராமரிப்பாளர்**

கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma

கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - விசா சேவைகள்.
(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)

CIMS College
49A, Chapel Street, Jaffna.
(C-0967)
College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322

**அனைத்து நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்கள்**
குறைந்த விலையில்

- Air Ticket Date Change
- Travel Insurance
- Online Visa Appoinments
- Travel Itinerary
- Sri Lanka Visa Extension
- All Country Visa Services

(C-0967)

உங்கள் அருகாமையில் எமது நேரடி கிளைகள்
கொழும்பு | மட்டக்களப்பு | திருகோணமலை | கிளிநொச்சி | புதுக்குடியிருப்பு | கொடிகாமம் | சாவகச்சேரி | புத்தூர் | யாழ்ப்பாணம் | நாச்சிமார் கோவிலடி | பண்டத்தரிப்பு | சுன்னாகம் | மானிப்பாய் | சங்கானை | கோப்பாய் | நெல்லியடி | பருத்தித்துறை | வல்வெட்டித்துறை

**V2 TRAVELS** 0768226240 / 0768226241


# ரணிலை மீண்டும் சந்திக்கிறார் சுமந்திரன்

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை எதிர்வரும் புதன்கிழமையன்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சுமந்திரனுக்கும் இடையில் நேற்று முன்தினம் இந்தச் சந்திப்புக்கான நேர ஒதுக்கீடு குறித்த தொலைபேசி உரையாடலொன்று நடைபெற்றுள்ளது.

இதன்போது மாகாண சபைகள் தேர்தல் திருத்தச்சட்டத்தின் அடுத்த கட்ட நடவடிக்கைகள் மற்றும் மாகாண சபைகளின் அதிகாரங்களை உறுதிப்படுத்துவதற்கான சட்டத்திருத்தங்கள் பற்றி ஆராயப்படவுள்ளதாக ஜனாதிபதிக்கு நெருக்கமான தரப்புக்களின் தகவல்கள் மூலம் அறிய முடிகிறது.

இதேவேளை கடந்த வெள்ளிக்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் சுமந்திரன் எம்.பிக்கும் இடையில் நடைபெறவிருந்த சந்திப்பு உயர்நீதிமன்றத்தில் ஹரீன், மனுஷவின் வழக்குத் தீர்ப்பு அறிவிக்கப்படவுள்ளதாக விடுக்கப்பட்ட அழைப்பால் ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், மீண்டும் இந்த வார இறுதிக்குள் இந்த சந்திப்பு மீண்டும் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதேபோன்று, தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமாரவுடனான சந்திப்பொன்றிலும் சுமந்திரன் பங்கேற்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. எனினும், இந்த சந்திப்பு தொடர்பிலான எந்த உறுதிப்படுத்தல்களையும் செய்துகொள்ள முடியவில்லை. (ம)

### கடந்த 24 மணிநேரத்தினுள்


# நாடளாவிய ரீதியில் 729 பேர் கைது

நாடளாவிய ரீதியில் கடந்த 24 மணித்தியாலங்களுக்குள் மேற்கொள்ளப்பட்ட யுக்திய சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது 729 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்களில் 710 ஆண்களும் 19 பெண்களும் அடங்குவர். அவர்களில் 09 பேர் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன் 11 பேர் புனர்வாழ்வு மையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 130 கிராம் ஹெரோயின், 184 கிராம் ஐஸ், 209 கிராம் கஞ்சா ஆகியன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (ம)

## 8 ஆம் ஆண்டு நினைவுகள் 7 ஆம் ஆண்டு





பிறப்பு: 12.05.1939 இறப்பு: 10.08.2016

**வயிரமுத்து சிவலிங்கம்**
(ஓய்வுநிலை ஆசிரியர்)
திதி: அட்டமி

பிறப்பு: 23.11.1950 இறப்பு: 24.05.2017

**சிவலிங்கம் கனகமணி**
திதி: திரயோதசி

தந்தையாய் தாயாய் எங்களை செதுக்கிய சிற்பிகளே எப்படி
உங்களை நாம் மறப்பது ஆண்டுகள் எத்தனை சென்றாலும்
மறந்திடுமா உங்கள் நினைவுகள் வேண்டுதல் செய்கின்றோம். இன்று
உங்கள் ஆத்ம சாந்திக்காய் உங்கள் நினைவுகள் சுமந்தபடி எங்கள் பயணம்......
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குப்பிளான் தெற்கு,
ஏழாலை. (1672)

பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (241)

**076 825 7716** (ஆகாஸ்)

**சணல் ஆட்டுக் குட்டிகள் விற்பனைக்குண்டு**

கடாய் - 02 x 60,000/=
மறிக்குட்டி - 02 x 58,000/=
தொடர்புகளுக்கு :
**076 234 6416** (1684)

**V2 VISA SERVICES**
**கனடா**
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
- கனடா PASSPORT APPOINMENTS

**விமான பயணச்சீட்டுக்கள்**
- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-0967)


# மரண அறிவித்தல்



மலர்வு 12 - 03 - 1962

உதிர்வு 09 - 08 - 2024

## திருமதி சாந்தினி திருவாதவூரன்

யாழ்ப்பாணம் நீராவியடியைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தை, சுன்னாகம் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சாந்தினி திருவாதவூரன் அவர்கள் 09.08.2024 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம்(கல்லூரி அதிபர்) - இராஜலக்சுமி தம்பதியினரின் செல்வப் புதல்வியும் மார்க்கண்டு திருவாதவூரனின் (சட்டத்தரணியும் கணக்காளரும்) பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற மார்க்கண்டு(கல்லூரி அதிபர்) மற்றும் தவமணி(UK) தம்பதியினரின் பாசமிகு மருமகளும் கனிஸ்கா கெளரிகரன்(UK), திருவாதவூரன் சங்கராத்மஜன்(UK) ஆகியோரின் அருமைத் தாயாரும் தாமோதரம் கெளரிகரனின்(UK) அன்பு மாமியாரும் றியா(UK), றிஷான்(UK) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் மார்க்கண்டு சிவநேசன் (தீனதயாளன்) (Australia), பக்தவத்சலா கெங்காதரன்(UK), மார்க்கண்டு ஆலாலசுந்தரன் (UK) மற்றும் மார்க்கண்டு கெளரிகரன்(UK) ஆகியோரின் அருமை மைத்துனியும் அரியநாயகம் லிங்கேஸ்வரனின்(UK) உடன் பிறவா சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (1683)

210, கே.கே.எஸ் வீதி,
சுன்னாகம் வடக்கு, சுன்னாகம். 076 594 3329

தகவல் : மார்க்கண்டு
திருவாதவூரன்(கணவன்)

# மரண அறிவித்தல்

## பொஷன்ரிடரன்ஸ் சிந்துஜன்

(அம்புலன்ஸ் சாரதி - ரூபிக்ஸ் வைத்தியசாலை, நெல்லியடி)



புலோலி கிழக்கு சந்தா தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் மிருசுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட பொஷன்ரிடரன்ஸ் சிந்துஜன் அவர்கள் 10.08.2024 சனிக்கிழமை அன்று அகால மரணமானார்.

அன்னார் பொஷன்ரிடரன்ஸ் (ஓய்வுபெற்ற சாரதி - இ.போ.ச) - பத்மரஜனி தம்பதிகளின் புதல்வனும் ஜெயந்தியின் பாசமிகு கணவரும் நிக்ஷலாவின் அன்புத் தந்தையும் மிருசுவிலைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை - பரமேஸ்வரி தம்பதிகளின் பாசமிகு மருமகனும் இதயரூபன், துஷ்யந்தி, யதுர்சா, டெனிஸ்ரா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு (12.08.2024) இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு புலோலி கிழக்கு சந்தா தோட்டத்தில் இடம்பெற்று பூதவுடல் பருத்தித்துறை புனித அந்தோனியார் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கோரியடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

077 188 2000
077 451 5547
(C-968)

தகவல் :
குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.08.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org